பக்கங்கள்: பன்னிரண்டு

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 24 வள்ளுவர் ஆண்டு 2040 ஆனி 18 வியாழக்கிழமை (02.07.2009) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 218

# அரசியல் தீர்வுக்குரிய திட்டம் சர்வஜன வாக்கெடுப்பு மூலமே அங்கீகரிக்கப்படும் என அறிவிப்பு

கொழும்பு, ஜூலை 02

தமிழர் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு வழங்குவது தொடர்பில் தேசிய இணக்கப்பாடொன்று எட்டப்பட்டதும் அந்த அரசியல் தீர்வு யோசனை சர்வஜன வாக்கெடுப்புக்கு விடப்படும் என்று அரசு அறிவித்துள்ளது.

தமிழர் பிரச்சினைக்கு ஒன்றிணைக்கப்பட்ட நாட்டுக்குள் தீர்வொன்றை வழங்குவதற்கு தனக்கொரு வாய்ப்பை வழங்குமாறு அரசில் அங்கம் வகிக்கும் அரசியல் கட்சித் தலைவர்களிடம் ஜனாதிபதி வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளார் என்றும் அரசு தெரிவித்துள்ளது. (12 ஆம் பக்கம் பார்க்க)

## எரிபொருள் விலை மீண்டும் அதிகரிப்பு

கொழும்பு, ஜூலை, 02

நேற்றிரவு முதல் மீண்டும் எரிபொருள்களின் விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன என்று அரசு அறிவித்துள்ளது.

இதனடிப்படையில் 90 ரூபாவாக இருந்த ஒரு லீற்றர் சாதாரண பெற்றோலின் விலை 10 ரூபாவாலும், 95 ரூபாவாக இருந்த சுப்பர் பெற்றோலின் விலை 15 ரூபாவாலும், டீசலின் விலை 3 ரூபாவாலும், மண்ணெண்ணையின் விலை ஒரு ரூபாவாலும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச சந்தையில் எரிபொருள்களின் விலை அதிகரிக்கப்பட்டுள்ள காரணத்தினால்தான் நாட்டில் எரிபொருள்களின் விலை மீண்டும் அதிகரிக்கப்பட்டுள்ளன என்று இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் மேஜர் ஜெனரல் அசோக்க தொரதெனிய தெரிவித்தார். (சி)

## முஸ்லிம் காங்கிரஸ் வழக்குத் தாக்கல்

கொழும்பு, ஜூலை 02

யாழ். மாநகரசபைத் தேர்தலுக்கான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் வேட்பு மனு நிராகரிக்கப்பட்டமையை ஆட்சேபித்து அக்கட்சி நேற்று கொழும்பு உயர்நீதிமன்றில் அடிப்படை உரிமை மீறல் மனு ஒன்றைத் தாக்கல் செய்துள்ளது.

முஸ்லிம் காங்கிரஸின் பதில் செயலாளர் நாயகம் நிஷாம் காரியப்பர் இந்த மனுவைத் தாக்கல் செய்துள்ளார்.

இதில் யாழ். தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலர், தேர்தல் ஆணையாளர் மற்றும் சட்டமா அதிபர் ஆகியோர் எதிர் மனுதாரர்களாக குறிப்பிடப்பட்டிருக்கின்றனர்.

யாழ். மாநகர சபைத் தேர்தலுக்கான வேட்பு மனு (12 ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி இன்று அழைத்துள்ள கூட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பங்கேற்கிறது

கொழும்பு, ஜூலை 02

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவால் புதிதாக அமைக்கப்பட்டுள்ள அபிவிருத்திக்கும் இணக்கப்பாட்டுக்குமான அனைத்துக் கட்சிக் குழுக் கூட்டம் இன்று அலரி மாளிகையில் நடைபெறுகிறது. இதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஐந்து நாடாளுமன்ற உறுப்பினர்கள் என்.ஸ்ரீகாந்தா தலைமையில் கலந்துகொள்கின்றனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான ரி.கனகசபை, சிவநாதன் கிஷோர், வினோ நோதராதலிங்கம், கே.துரைரட்ணசிங்கம் ஆகியோரே என்.ஸ்ரீகாந்தா தலைமையில் இக்கூட்டத்தில் கலந்து கொள்கின்றனர்.

ஜனாதிபதியின் செயலர் லலித் வீரதுங்க நேற்றுமாலை இந்தக் கூட்டத்திற்கான அழைப்புக் கடிதங்களை தனித்தனியே கூட்டமைப்பு உறுப்பினர்களுக்கு அனுப்பி வைத்தார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

**கல்விச்சுடர்**

**நாளை**

தரம் 5 புலமைப்பரிசில் மாணவர்களுக்கான தயார் படுத்தல் பரீட்சைத் தொடர் - 2009

## குடாநாட்டின் உற்பத்தித் துறைகளுக்கு இலங்கை வங்கி விசேட வசதிகளுடன் பலவகை இலகு கடன்களை வழங்கும்

### வங்கியின் தலைவர் கலாநிதி காமினி தகவல்

யாழ்ப்பாணம், ஜூலை 02

விவசாயம், மீன்பிடி, சிறுகைத்தொழில் போன்றவற்றை குடாநாட் டில் ஊக்குவிக்கும் முகமாக விசேட வசதிகளுடன் சிறுகடன்களை வழங்குவதற்கு நாம் திட்டமிட்டுள்ளோம்.



யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்த இலங்கை வங்கித் தலைவர் கலாநிதி காமினி விக்கிரமசிங்க இவ்வாறு தெரிவித்தார்.

யூ ரோ வில் மாநாட்டு மண்டபத்தில் நேற்று பிற்பகல் அரச, தனியார், விவசாய, மீன்பிடி பிரதிநிதிகள் மற்றும் கல்வியியலாளர்களுடன் நடைபெற்ற கலந்துரையாடலின் போது கலாநிதி காமினி விக்கிரமசிங்க இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

(12 ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவத்துக்கு ஆள்சேர்ப்புச் செய்வதால் நாணய நிதியத்தின் கடனுதவி தடைப்படலாம்

### இலங்கை அரசுக்கு புதிய தலையிடி என்கின்றன ராஜதந்திர வட்டாரங்கள்

கொழும்பு, ஜூலை 02

இலங்கை இராணுவத்திற்கு மேலும் 50 ஆயிரம் பேரை சேர்ப்பதற்கு அரசு தீர்மானிக்கும் பட்சத்தில் சர்வதேச நாணய நிதியத்தின் கடனுதவி கிடைப்பது தடைப்படலாம் என மேற்குலக ராஜதந்திரிகளை மேற்கோள் காட்டி ரொய்ட்டர் செய்தி வெளியிட்டுள்ளது.

முப்படைகளுக்கும் 50 ஆயிரம் பேரை புதிதாகச் சேர்த்துக்கொள்ள அரசு தீர்மானித்துள்ளது என பாதுகாப்பு பேச்சாளரான அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல (12 ஆம் பக்கம் பார்க்க)

## சீன நிறுவனங்களுக்கு வர்த்தக வலயம் மீரிகமவில் விசேடமாக நிறுவப்படும்

கொழும்பு, ஜூலை 02

இலங்கையில் சீன நிறுவனங்கள் தமது நிறுவனங்களை அமைத்து முதலீடுகளை மேற்கொள்ள மீரிகமவில் பிரத்தியேக வர்த்தக வலயம் ஒன்றை நிறுவ அரசாங்கம் அனுமதி வழங்கியுள்ளது.

வெளிநாடு ஒன்றுக்கு இத்தகைய வசதி வழங்கப்படுவது இதுவே முதல்தடவையாகும்.

ஆசியாவின் மிகப்பெரும் பொருளாதார நாடான சீனாவிடமிருந்து மேலும் முதலீட்டை கவரும் ஒரு முயற்சியில், இலங்கை சீன நிறுவனங்களுக்கு பிரத்தியேக வலயம் ஒன்றை அளித்திருக்கிறது.

தலைநகர் கொழும்புக்கு சுமார் 55 கிமீ தூரத்தில் இருக்கும் மீரிகமவில், ஹொங்காங்கிலிருந்து இயங்கும் 'ஹுய்ச்சென் இன்வெஸ்ட்மன்ட் ஹோல்டிங்க்ஸ்' என்ற நிறுவனம் இந்த பொருளாதார வலயத்தை உருவாக்கும் என்று இலங்கையின் முதலீட்டு மேம்பாட்டு நிறுவனம் கூறியது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## மடு வருடாந்தத் திருவிழாவை நடத்துவதற்கு அனுமதி வழங்க படைத்தரப்பு முடிவு

கொழும்பு, ஜூலை 02

புனித மருதமடு திருத்தலத்தின் வருடாந்தத் திருவிழா உற்சவங்களை நடத்த இராணுவம் அனுமதி வழங்கியுள்ளது.

இதன்படி, எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் கோலகலமாக புனித மருதமடு தேவாலயத் திருவிழா நடைபெறும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

வன்னி இராணுவத் தலைமையகத்தில் நடைபெற்ற (12 ஆம் பக்கம் பார்க்க)

## இடம்பெயர்ந்து வாழும் மக்களிடம் கூடாரங்கள் தவிர வேறெதுவுமில்லை!

### டென்மார்க் அகதிகள் கவுன்ஸில் சுட்டிக்காட்டுகிறது

கொழும்பு, ஜூலை 02

மோதல் காரணமாக இடம்பெயர்ந்த நிலையில் வவுனியா முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள மக்களிடம் வெறும் கூடாரங்கள் மாத்திரம் உள்ளன. வேறு பொருள்கள் எவையுமில்லை என டென்மார்க் அகதிகள் கவுன்ஸில் சுட்டிக்காட்டியுள்ளது.

இடம்பெயர்ந்த மக்கள் மத்தியில் பணிபுரிந்துவரும் இந்த அமைப்பு மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

(12 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துகின்றோம்

கலாநிதி
வேலுப்பிள்ளை புகபாலசிங்கம்

எமது மெய்யியற்றுறைப் பேராசான் மேலைத்தேய மெய்யியலில் கலாநிதிப்பட்டத்தைப் பெற்றமையையிட்டு பெருமகிழ்ச்சியடைகின்றோம். பலன் கருதாப் பண்பாளனே தொடரட்டும் உங்கள் கல்விப் பணி.

அவரின் பழைய மாணவர்கள்,
பட்டப்படிப்புகள் கல்லூரி, யாழ்ப்பாணக் கல்லூரி.


யாழ்.மாணவர்களுக்கொரு நற்செய்தி

## ஸ்ரார் பப்பிளிகேசன்

கொழும்பு

இன்று முதல் யாழ்.நகரில் எமது ஏக விநியோகஸ்தர்

தரம் 1 முதல் A/L வரையான
சகல புத்தகங்களையும்
ஒரே இடத்தில்
பெற்றுக்கொள்ளுங்கள்

அன்னை புத்தகசாலை
இல.7, நவீன சந்தை,
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

| | | |
|---|---|---|
| A/L - 2009 | தரம் - 6 முதல் O/L | புலமைப்பரிசில் |
| கணக்கீடு - | வரையான | மாணவர்களுக்கான |
| பௌதிகவியல் - | விஞ்ஞானம் - | விசேட வினாத்தாள்கள் |
| இரசாயனவியல் - | By.நிர்மலன் | விடையுடன் - |
| பொருளியல் - | | 2009 |


நல்லூர் கந்தசுவாமி கோயில் மகோற்சவ கால தற்காலிக கடைகளை குத்தகைக்கு வழங்குவதற்கான

## கேள்வி அறிவித்தல் - 2009

நல்லூர் கந்தசுவாமி கோயில் மகோற்சவ காலத்தில் தற்காலிக கடைகள் அமைப்பதற்கான நிலையங்களை குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் 15.07.2009ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 12.30 மணி வரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

ஐஸ்கிறீம் கடைகளுக்கு மீளளிக்கக் கூடிய வைப்புப் பணமாக ரூபா 10000 ம் ஏனைய கடைகளுக்கு ரூபா 2000 ம் மீளளிக்கப்படாத கேள்விப் படிவக் கட்டணமாக ரூபா 300ம் (வற்வரி, தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி நீங்கலாக) செலுத்தி பற்றுச்சீட்டைப் பெற்று விண்ணப்பப் படிவத்தினை மாநகராட்சி மன்ற நானாவித இறைவரிப் பகுதியில் 15.07.2009ஆம் திகதி மு.ப. 10 மணிவரை பெற்றுக் கொள்ளலாம். விண்ணப்பப் படிவங்கள் யாவையும் இந்த அலுவலகத்தில் வைக்கப்படும் கேள்விப் பெட்டியில் 15.07.2009ஆம் திகதி நண்பகல் 12 மணிக்கு முன்னர் சேர்க்கப்படல் வேண்டும்.

கிடைக்கப்பெற்ற கேள்விகள் யாவும் எதிர்வரும் 15.07.2009ஆம் திகதி பி.ப. 2 மணிக்கு ஆணையாளர் அலுவலகத்தில் திறக்கப்படும். சித்திபெற்றவர் கேள்வித் தொகையை முழுமையாக செலுத்தி குறிக்கப்பட்ட இடத்தினை பெற்றுக் கொள்ளலாம்.

மேலதிக விவரங்களை மாநகராட்சி மன்ற நானாவித இறைவரிப் பகுதியில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்வதுடன் வரைபடத்தையும் பார்வையிடலாம்.

குறிப்பு: கோயில் சுற்றாடலில் உள்ள நிரந்தர கடைகளும், உற்சவ காலத்திற்கு மாநகரசபையால் வழங்கப்படும் கடைகளும் தவிர, வேறு கடைகள், தனியார் காணிகளிலோ அல்லது தனிப்பட்ட இடங்களிலோ சபையின் அனுமதி இன்றி திறந்து வியாபாரம் நடத்தவும், விளம்பரங்கள் விளம்பரப் பதாகைகள் அமைப்பதற்கு அனுமதி வழங்கப்பட மாட்டாது என்பதனை அறியத் தருகின்றோம்.

கோயில் சுற்றாடலில் உள்ள நிரந்தரக் கடைகள் வியாபார மாற்றம் செய்வதாயின் அதற்கான உரிமத்தை யாழ்ப்பாணம் மாநகர சபையிலிருந்து பெற்றுக்கொள்ள வேண்டும்.

மு.செ.சரவணபவ,
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.
மாநகராட்சி மன்றம், யாழ்ப்பாணம்.

## மரண அறிவித்தல்

### செல்லப்பா சுப்பிரமணியம் (ஓய்வுபெற்ற ஆசிரியர்)



அராலி மத்தியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட செல்லப்பா சுப்பிரமணியம் நேற்று (01.07.2009) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லப்பா - வள்ளியம்மை தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும், காலஞ்சென்றவர்களான நாகமுத்து - தங்கம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும், நல்லம்மாவின் (இளைப்பாறிய ஆசிரியை) அன்புக் கணவரும், குகானந்தன், குகவதனா, குகரதி (ஆசிரியை, வட்டு இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும், கனகம்மா (கனடா), காலஞ்சென்ற கனகரத்தினம் (மலேசியா) மற்றும் விசுவநாதர், குமாரசாமி , முத்துக்குமாரசாமி, காலஞ்சென்ற சிவப்பிரகாசம் மற்றும் மகாலிங்கம், சிவசுந்தரம் (கனடா) ஆகியோரின் சகோதரரும், காலஞ்சென்ற தனபாலன் மற்றும் அகிலாண்டேஸ்வரி, சசிதரன் ஆகியோரின் மாமனாரும், சுதர்சன், தனுசா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.07.2009) வியாழக்கிழமை பி.ப.,2 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பூனாவோடை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அராலி மத்தி,
வட்டுக்கோட்டை (86678) குடும்பத்தினர்

## ஆங்கில ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல் நாளை

யாழ்ப்பாணம், ஜூலை 2

உயர்தேசிய ஆங்கில டிப்ளோமா, பகுதி நேர ஆங்கில ஆசிரியர்களின் நிரந்தர நியமனம் தொடர்பாக தகவல்களை திரட்டுவதற்கான கலந்துரையாடல் நாளை பி.ப. 3 மணிக்கு ஆரியகுளம் சந்தியில் உள்ள உயர் கல்வி நிலையத்தில் இடம்பெறவிருக்கிறது.

தகவல்களை அமைச்சரிடம் சமர்ப்பிக்க வேண்டியுள்ளதால் சம்பந்தப்பட்டவர்களை தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (1)

## இறுதியாட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 2

இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தின் அனுசரணையுடன் யாழ்.பாடசாலைகள் உதைபந்தாட்டச்சங்கம் நடத்திவரும் 15 வயதுப் பிரிவினருக்கான சுற்றுப்போட்டியின் இறுதியாட்டம் இன்று காலை 8.30 மணிக்கு யாழ்.மத்திய கல்லூரியில் இடம் பெறவுள்ளது.

புங்குடுதீவு ம.வியும் யாழ்.மத்திய கல்லூரியும் இந்த ஆட்டத்தில் மோதவிருக்கின்றன.

யாழ் மத்திய கல்லூரி அதிபர் எஸ்.ஓங்காரமூர்த்தி பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (1)

## மட்டு கல்வியியற் கல்லூரிக்கு மேலும் 16 மாணவர்கள் தெரிவு

யாழ்ப்பாணம், ஜூலை 2

மட்டக்களப்பு தேசியக் கல்வியியற் கல்லூரிக்கு கணிதபாடத்துறைக்கு மேலும் 16 மாணவர்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

தெரிவானவர்கள் தமது அனுமதிக் கடிதங்களை தம்மிடம் உடன் பெற்று எதிர்வரும் 7ஆம் திகதிக்கு முன்னர் பதிவுகளை மேற்கொள்ளுமாறு யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி எஸ்.கே.யோகநாதன் கேட்டுள்ளார்.

தெரிவானவர்கள் விவரம் வருமாறு:

கே.ஜசிந்தா - கோண்டாவில், [illegible] சுஜித்தா - சுன்னாகம் கிழக்கு, என்.சகி[illegible] - இமையாணன் வடக்கு, கே.லக்ஷனா [illegible]ணவாய் வடகிழக்கு, கே.லுக்சனா - பன்ன[illegible] கே.றுக்சிகா - திருநெல்வேலி, பி.துர்[illegible]ணவாய் தெற்கு, ரி.விஜயபிரகாஸ் - [illegible]ண்டாவில் மேற்கு, பி.யாழினி - தாவடி [illegible]கு, வி.வசந்துசா - கோண்டாவில் கிழக்கு, எஸ்.சபேசன் - புலோலி வடகிழக்கு, ரி.ரூபி - இணுவில் கிழக்கு, எஸ்.சசீவன் - மட்டுவில் கிழக்கு, எஸ்.சர்மிலா - கரணவாய் கிழக்கு, கே.மோர்சிலக்கி - அரியாலை மேற்கு, ரி.பிரசாந் - அரசடி வீதி, யாழ்ப்பாணம்.

## மரம் முறிந்து வீழ்ந்ததில் மூவர் காயமடைந்தனர்

திருநெல்வேலி, பலாலி வீதியில் உள்ள எரிபொருள் நிலையத்துக்கு அருகிலுள்ள அரசமரம் முறிந்து வீழ்ந்ததில் அதில் சிக்கி மூன்று பேர் காயமடைந்துள்ளனர். இச்சம்பவம் நேற்று புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு இடம்பெற்றது.

இச்சம்பவத்தில் கே.வேலாயுதம் (வயது 50 - மாரீசன்கூடல்), அ.முருகையா (வயது 54 - சந்தை வீதி, சங்கானை), எஸ்.கைலயங்கிரிவாசன் (வயது 43 - இணுவில்) ஆகிய மூவருமே காயமடைந்துள்ளனர்.

சிகிச்சைக்காக இவர்கள் மூவரும் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (1-201-78-111)

## மீள் குடியமர்வு கூட்டம் பிற்போடப்பட்டது

யாழ்ப்பாணம், ஜூன் 2

மறவன்புலோ,தனங்களப்பு,கைதடி, நாவற்குழி பகுதிகளில் இருந்து இடம் பெயர்ந்த மக்களுக்கு இன்று வியாழக் கிழமை தென்மராட்சி தெற்கு மீளக் குடியமர்வோர் சங்கத்தால் நடத்தப்படவிருந்த கூட்டம் தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளது.

கூட்டம் நடைபெறும் புதிய திகதி பின்னர் அறிவிக்கப்படும் என்று சங்கம் மேலும் தெரிவித்துள்ளது. (203)

## சுவாமி விவேகானந்தரின் உருவப்படம் திரைநீக்கம்

யாழ்ப்பாணம், ஜூலை 2

சுவாமி விவேகானந்தரின் திருவுருவப் பட திரைநீக்க நிகழ்வு நாளை வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு கம்பர் மலை அரசினர் தமிழ் வித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளது.

வித்தியாலய அதிபர் சு.கிருஷ்ணராஜா திருவுருவப்படத்தை திரைநீக்கம் செய்து வைக்கவுள்ளார்.

இந்த நிகழ்வில் பருத்தித்துறை ஸ்ரீராம கிருஷ்ண சாரதா சேவாச்சிரம சுவாமி சித்ரூபானந்தா சுவாமி விவேகானந்தரின் சிந்தனைகள் என்னும் தலைப்பில் உரை நிகழ்த்துவார். (203)

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி ஆசிரியை செல்வி க.ஜெயகலா அவர்களின் அருமை அன்னையார்

### திருமதி கதிரவேலு சரஸ்வதி

அவர்கள் 29.06.2009 அன்று அமரத்துவமடைந்துவிட்டார். அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதோடு அன்னையை இழந்து வருந்தும் குடும்பத்தவரின் துயரில் நாமும் பங்குகொள்கின்றோம்.

ஆசிரிய சகோதரத்துவமும்
கல்விசாரா ஊழியர்களும்
யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரி.

## கண்ணீர் அஞ்சலி

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் பிரதி அதிபர் திருமதி சௌபாக்கியகௌரி பத்மநாதன் அவர்களின் பாசமிகு தாயார்

### திருமதி புனிதவதி விஜயரட்ணம்

29.06.2009 அன்று காலமானார். அவரது பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது கண்ணீர் அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனிடம் பிரார்த்திக்கின்றோம்.

யா/மகாஜனக் கல்லூரி,
தெல்லிப்பழை.
ஆசிரியர் கழகம்.

## கண்ணீர் அஞ்சலி



### இரத்தினம் வைகுந்தவாசன்

(களஞ்சியப் பொறுப்பாளர், பனை அபிவிருத்திச் சபை)

எமது சபையில் களஞ்சியப் பொறுப்பாளராக கடமையாற்றிய இரத்தினம் வைகுந்தவாசன் அவர்களின் மறைவையிட்டு எமது ஆழ்ந்த கண்ணீர் அஞ்சலியை செலுத்துவதோடு அன்னாரது பிரிவால் துயருற்றிருக்கும் அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிக்கின்றோம்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தலைவர், பணியாளர்கள், பனை அபிவிருத்திச் சபை.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி ரவிக்குமார் வளர்மதி



புலோலியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்ட வளர்மதி 29-06-2009 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வீரவாகு - மங்கையர்க்கரசி (புலோலி) தம்பதியினரின் அன்புப் புதல்வியும், பொன்னம்பலம் (நடராசா), சின்னப்பிள்ளை (கண்டாவளை) ஆகியோரின் மருமகளும், ரவிக்குமாரின் அன்பு மனைவியும், விதுஷன், வித்தியா ஆகியோரின் அன்புத் தாயாரும் கனடாவில் வசிக்கும் பத்மாவதி, மாதவன், கேசவன், அரவிந்தன், கிரிதரன், பார்த்தீபன், ஆகியோரின் அன்புச் சகோதரியும், பூரணசுவாமிநாதன் (லண்டன்), பாலசுப்பிரமணியம் (கனடா), மங்கையர்திலகம் (கனடா), ஞானகுமாரி (லண்டன்), ரதிகுமாரி (கனடா), ரவீந்திரன் (லண்டன்), விஜயகுமாரி(கனடா), நவக்குமார் (லண்டன்), தாசகுமார்(கனடா) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் Midland and Sheppard ல் 4164 Sheppard Ave வில் Ogden Funeral Home ல் புதன்கிழமை (01.07.2009) மாலை 5 மணிதொடக்கம் 9 மணிவரையும் வியாழக்கிழமை காலை 8 - 9 மணி வரையும் அஞ்சலிக்கு வைக்கப்பட்டு இறுதிக்கிரியைகள் அன்று 10 - 12 மணிவரை நடைபெற்று பூதவுடல் 375, Mount Pleasent Cemetary ல் தகனம் நடைபெறும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ரவிக்குமார் - 001 4165081330, 001 4164251973
மாதவன் - 001 4167467620
தகவல்: ரவிக்குமார் (கனடா).

### இரத்தினம் வைகுந்தவாசன்

(களஞ்சியக் காப்பாளர், பனை அபிவிருத்திச் சபை, யாழ்ப்பாணம்)



அரியாலை, கலைமகள் வீதியைப் பிறப்பிடமாகவும் கொக்குவில், பிறவுண் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட இரத்தினம் வைகுந்தவாசன் நேற்று (01.07.2009) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கலாபூசணம் V.K.இரத்தினம் (பிரபல கட்டடக் கலைஞர், சோக, சோபித சொர்ணக் கவிக்குயில்) மற்றும் செல்வமணி தம்பதியினரின் சிரேஷ்ட புத்திரனும் காலஞ்சென்றவர்களான நாகமுத்து - சிவக்கொழுந்து தம்பதியினரின் அன்பு மருமகனும் அன்னலட்சுமியின் அன்புக் கணவரும் றஜிதா (இறுதி ஆண்டு மாணவி, நுண்கலைக் கூடம், யாழ்.பல்கலைக்கழகம்), சங்கீதா, மயூரதன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் றஞ்சினிதேவி (ஆசிரியை, ஸ்ரீகலைமகள் முன்பள்ளி), கமலினிதேவி, வசந்தவாசன் (நோர்வே), வதனவாசன் (யாழ்ப்பாணம் ப.நோ.கூ. சங்கம்), றாகினி ஆகியோரின் அன்புச் சகோதரனும் வரதராஜன் (முகாமையாளர், N.S.B.), நேத்திரானந்தம் (கிராம அலுவலர், கரவெட்டி), நிர்மலா (நோர்வே), கௌரி (ஆசிரியை, மானிப்பாய் விவேகானந்தா வித்தியாலயம்), அன்பரசன் (அரியாலை, பனை, தென்னை அ.கூ.ச.), குமாரு, மார்க்கண்டு, தம்பிப்பிள்ளை, செல்லம்மா கந்தசாமி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.07.2009) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பி.ப. 2 மணியளவில் கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: இ.வதனவாசன் (சகோதரன்)
(யாழ்ப்பாணம் ப.நோ.கூ. சங்கம்)
ஆனந்தன் (பேரமகன் - ஆனந்தன் காஜ்).

இல.47/1, பிறவுண் வீதி,
கொக்குவில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்.போதனா வைத்தியசாலைக்கு 'இன்குபேட்டர்' கையளிப்பு நிகழ்வில் லயன்ஸ் கழக உறுப்பினர்கள் அந்த உபகரணத்தை வைத்தியசாலைப் பணிப்பாளரிடம் கையளிப்பதை முதலாவது படத்தில் காணலாம்.

குழந்தைகள் வைத்திய நிபுணர் எஸ்.அருள்மொழி, லயன்ஸ் மாவட்ட இணைப்பாளர்களான வைத்திய கலாநிதி வை.தியாகராசா, எஸ்.இரவீந்திரா ஆகியோர் உரையாற்றுவதை அடுத்துள்ள படங்களிலும் காணலாம். (படங்கள்:லக்ஸ்மன்)

## நலன்புரி நிலையங்களில் தங்கியிருந்தோர் மாற்றம்

யாழ்ப்பாணம், ஜூலை 2

கைதடி சைவச் சிறுவர் இல்ல நலன்புரி நிலையத்திலிருந்த குடும்பங்கள் இராமாவில் நலன்புரி நிலையத்திற்கும், இராமாவில் நலன்புரி நிலையத்தில் தங்கியிருந்த 162 பேர் அடங்கிய குடும்பங்கள் கைதடி சைவச் சிறுவர் இல்ல நலன்புரி நிலையத்திற்கும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (1 - 207)

## அருணகிரி நாதசுவாமிகளின் நினைவுப் பெருவிழா

கரவெட்டி, ஜூலை 2

அருணகிரி நாத சுவாமிகளின் நினைவுப் பெருவிழா சந்நிதியான் ஆச்சிரமத்தில் எதிர்வரும் 10ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30மணிக்கு இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் 'வாக்கிற்கு அருணகிரி நாதர்' என்னும் தலைப்பில் சிவத்தமிழ்வித்தகர் சிவமகாலிங்கம் சொற்பொழிவு நிகழ்த்துவார்.

தொடர்ந்து சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் வாராந்த நிகழ்வு இடம்பெறும்.

இதில் தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை ம.வி.மாணவர்களின் கலை நிகழ்வும் இடம்பெறும். (203-70)

## யாழ்.சென்றலில் கணனிப் பயிற்சி நெறி

யாழ்ப்பாணம், ஜூலை 2

யாழ்.கல்வி வலய முறைசாராக் கல்விப் பிரிவினரால் யாழ்.மத்திய கல்லூரிக்கு ஆங்கிலம், கணனி வன்பொருள் (ஹாட்வெயார்) பாடநெறிகளுக்கான விண்ணப்பங்கள் மாணவர்களிடமிருந்து கோரப்பட்டுள்ளன. விண்ணப்பங்களை மேற்படி கல்லூரியில் பெற்றுக்கொள்ளுமாறு கல்லூரி அதிபர் அறிவித்துள்ளார். (201)

### குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்

## சுழிபுரம் வீதியில் பஸ்தரிப்பு நிலையங்கள்

சுழிபுரம் பிரதான வீதியில் இரண்டு பஸ்தரிப்பு நிலையங்கள் புதிதாக அமைக்கப்பட்டுள்ளன.

சுழிபுரம் சந்தி, சுழிபுரம் சத்தியக்காட்டுச் சந்தைக்கு அருகில் இரண்டு இடங்களில் பஸ்தரிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. (203-28)

## மரத்தில் தோன்றியுள்ள பிள்ளையார் உருவம்

வலி.வடக்கு, ஜூலை 02

சுன்னாகம், கந்தரோடை வீதியில் அமைந்துள்ள ஆலடிப்பிள்ளையார் ஆலய வளாகத்தில் உள்ள மரம் ஒன்றில் இருந்து பிள்ளையார் உருவம் ஒன்று தோன்றியுள்ளது.

ஆலய வாசலில் அரசமரமும் வேப்ப மரமும் ஒன்றுடன் ஒன்று பிணைந்து வளர்ந்து காணப்படுகின்றன.

இந்த அரச மரத்தில் சுமார் 10 அடி உயரத்தில் ஆலயம் அமைந்துள்ள திசைநோக்கி இந்தப் பிள்ளையார் உருவம் வளர்ந்து வருகின்றது.

கடந்த வருடப்பிறப்பு தினத்தன்று இந்த உருவம் தோன்றியதாகவும் இது வளர்ந்தவாறே உள்ளதாகவும் அப்பகுதி மக்களால் தெரிவிக்கப்பட்டது. (203-86)

## நிறைகுறைந்த குழந்தைகளைப் பராமரிக்க "இன்குபேட்டர்' வைத்தியசாலைக்கு அன்பளிப்பு

### ஹெந்தலை லயன்ஸ் கழக செயலர் வழங்கினார்

யாழ்ப்பாணம், ஜூலை 2

யாழ்.போதனா வைத்தியசாலையில் பிறக்கும் நிறைகுறைந்த குழந்தைகளை வைத்துப் பராமரிக்கும் கண்ணாடிப் பெட்டியை (INCUBATOR) லயன்ஸ் கழகம் அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

இது தொடர்பான நிகழ்வு நேற்று முன்தினம் யாழ்.போதனா வைத்தியசாலையில் இடம்பெற்றது.

வடபிராந்திய லயன்ஸ் கழக உறுப்பினர்களின் வேண்டுகோளை ஏற்று, ஹெந்தல லயன்ஸ் கழகத்தின் ஆளுநர் சபைச் செயலாளர் வைத்திய கலாநிதி மல்கம் ஸ்ரனிஸ்லேகஸ் இந்த உபகரணத்தை அன்பளிப்புச் செய்துள்ளார்.

யாழ்.போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் வைத்தியகலாநிதி எஸ்.தேவநேசனிடம் லயன்ஸ் கழக உறுப்பினர்கள் கையளித்தனர். (1-111)

## தென்மராட்சியில் இரு லயன்ஸ் கழகங்களின் சமூக நலத்திட்ட நிகழ்வில் உப ஆளுநர் பங்கேற்பு

யாழ்ப்பாணம், ஜூலை2

சாவகச்சேரி, தென்மராட்சி கிழக்கு லயன்ஸ் கழகங்களின் வருடப்பூர்த்தியை ஒட்டி விசேட சமூக நலத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

இந்த நலத்திட்டங்களை ஆரம்பிக்கும் நிகழ்வுகளில் சர்வதேச லயன்ஸ் கழக 306பி, மாவட்ட உப ஆளுநர் லயன் பிரியந்த பெர்னாண்டோ கலந்து கொண்டார்.

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தின் முப்பதாவது வருட பூர்த்தி விழா கடந்த ஞாயிற்றுக்கிழமை சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் இடம்பெற்றது.

கழகத் தலைவர் லயன் வீ.வீ.மகாலிங்கம் தலைமையில் இந்நிகழ்வு நடைபெற்றது.

கழகத்தின் ஆரம்பகால உறுப்பினர்களான லயன் எஸ்.கே.நவரத்தினம், லயன் கே.வி.முத்துக்குமாரசாமி ஆகியோர் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டனர்.

நிகழ்வில் கைதடி கிழக்கைச் சேர்ந்த இளம்பிள்ளைவாத நோயினால் பாதிக்கப்பட்ட மு.பாமினி என்னும் 21 வயது யுவதிக்கு சக்கரநாற்காலி வழங்கப்பட்டது.

கழகத்தினால் நடத்தப்பட்ட ஆங்கில பயிற்சி வகுப்புகளில் கலந்து கொண்டோருக்கு சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

கழகத்தின் 32ஆவது தலைவராக லயன் ப.செல்லத்துரையும், செயலாளராக லயன் கே.பிரதீபனும், பொருளாளராக பு.தினேஸ்குமாரும் பதவியேற்றனர்.

தென்மராட்சி கிழக்கு லயன்ஸ் கழகத்தின் ஐந்தாவது ஆண்டு நிறைவு விழா கடந்த சனிக்கிழமை கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி.மண்டபத்தில் நடைபெற்றது.

கழகத் தலைவர் லயன் செ.சரவணமுத்து தலைமையில் இந்நிகழ்வு இடம்பெற்றது.

கழகத்தினால் மேற்கொள்ளப்படும் நலனோம்புத் திட்டங்களான வறிய மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கல், வறிய மாணவர்களுக்கு நிதி உதவி வழங்கல் ஆகியவற்றை மாவட்ட உதவி ஆளுநர் ஆரம்பித்து வைத்தார்.

கழகத்தின் நடப்பு வருட தலைவராக லயன் (டாக்டர்) ஆர்.கந்தையாவும் செயலாளராக லயன் கே.நடராஜாவும் பொருளாளராக லயன் கே.குலச்சந்திரனும் பதவியேற்றனர். (1-207)

## நயினையில் நாளை மஞ்சத் திருவிழா

யாழ்ப்பாணம், ஜூலை 2

நயினை நாகபூஷணி அம்மன் ஆலயப் பெருந் திருவிழாவில் நாளை வியாழக்கிழமை மஞ்சத் திருவிழா இடம்பெறவுள்ளது.

காலை 7 மணிக்கு மூலமூர்த்தி அம்பாளுக்கு 108 சங்காபிஷேகமும் அதனைத் தொடர்ந்து எழுந்தருளி அம்பாளுக்கு ஸ்நபினா அபிஷேகமும் நடைபெற்று அழகிய கைலாச வாகனத்தில் அம்பாள் வீதியுலா வரும் அலங்காரக் காட்சியும், இரவு விசேட மேளவாத்தியங்களுடன் மின்சார தீபங்களால் அலங்கரிக்கப்பட்ட கலைமிளிர் சித்திர திருமஞ்சத்தில் விநாயகப் பெருமான், அம்பாள் வள்ளி தேவசேனா சமேத முருகப் பெருமான் சகிதம் எழுந்தருளி திருவீதி வலம் வந்து அம்பிகை அடியார்களுக்கு அருள்பாலிக்கின்ற அருட்காட்சி நடை பெறும்.

நல்லூர் நாதஸ்வரகான விநோதன் எஸ்.பி.பாலமுருகன் குழுவினரதும் கோண்டாவில் நாதஸ்வர இசைமணி நாகதீபன் குழுவினரதும் நாதஸ்வரக் கச்சேரி இடம் பெறும். (1)

## வடமராட்சி உயர்தர வகுப்பு மாணவர்களுக்கு வழிகாட்டல் கருத்தரங்குகள் விக்னேஸ்வராவில்

யாழ்ப்பாணம், ஜூலை 2

கரவை ஒன்றிய வெளிநாட்டுக் கிளையின் அனுசரணையுடன் கரவெட்டி ஸ்பேர்ஸ் விளையாட்டுக்கழகம் வருடாந்தம் ஜீ.சி.ஈ உயர்தரப் பரீட்சையில் தோற்றும் மாணவர்களுக்கு இலவச வழிகாட்டல் கருத்தரங்கை கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரியில் நடத்தி வருகிறது.

இவ்வருடத்துக்கான கருத்தரங்கு மேற்படி பாடசாலையில் ஜீ.சி.ஈ உயர்தர கணித, விஞ்ஞானப் பிரிவு மாணவர்களுக்கு எதிர்வரும் சனி, ஞாயிறு தினங்களில் நடைபெறவுள்ளது.

பௌதிகவியல் பாடத்துக்கான கருத்தரங்கு எதிர்வரும் சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு நடைபெறும். யாழ்.பல்கலைக்கழக பௌதிகவியல்துறை [illegible] வர் கலாநிதி என்.[illegible], [illegible] மகளிர் கல்லூரி ஆசிரியர் பி.சிவகுமார் ஆகியோர் கருத்துரை வழங்குவர்.

இணைந்த கணிதம் பாடத்துக்கான கருத்தரங்கு எதிர்வரும் திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு நடைபெறும். யாழ்.பல்கலைக்கழக கணித புள்ளி விவரவியற்றுறை சிரேஷ்ட விரிவுரையாளர் எஸ்.சிறீ சற்குணராஜாவின் விரிவுரை இடம்பெறும். உயிரியல் பாடத்துக்கு யாழ்.பல்கலைக்கழக தாவரவியற்றுறை சிரேஷ்ட விரிவுரையாளர் ஐ.ஆர்.கபிலன், யாழ்.பல்கலைக்கழக விலங்கியற்றுறை விரிவுரையாளர் கே.கஜபதி ஆகியோரின் விரிவுரைகள் இடம்பெறும்.

இரசாயனவியல் பாடத்துக்கு யாழ். பல்கலைக்கழக இரசாயனவியற்றுறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி ரி. மனோறஞ்சன் கருத்துரை வழங்குவார். (201)

## கோப்பாய் கோட்ட அதிபர்கள் கூட்டம்

கோப்பாய், ஜூலை 2

கோப்பாய் கோட்ட அதிபர்களின் கூட்டம் எதிர்வரும் 7ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியில் இடம் பெறவுள்ளது.

நாளை வெள்ளிக்கிழமை இடம்பெறவிருந்த மேற்படி கூட்டம் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக கோப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் எஸ்.சித்திரவடிவேல் அறிவித்துள்ளார். (203-72)

## பெண்கள் சாரணிய பாசறை

யாழ்.மாவட்ட பெண்கள் சாரணிய பாசறை நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணி தொடக்கம் 6ஆம் திகதி காலை 7 மணி வரை மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறவுள்ளது என்று மாவட்ட ஆணையாளர் திருமதி என்.தர்மகுலசிங்கம் தெரிவித்துள்ளார். (203)

## நலன்புரி நிலைய மாணவர்களுக்கு கல்வி உபகரணப் பொதிகள்

யாழ்ப்பாணம், ஜூலை 2

தென்மராட்சிப் பகுதியில் உள்ள இடம்பெயர்ந்தோர் நலன்புரி முகாம்களில் தங்கியிருக்கும் பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களை கொண்ட பொதிகள் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

இதற்கெனக் கொழும்பில் இருந்து கப்பல் மூலம் இரண்டாயிரம் கல்வி உபகரணப் பொதிகள் கொண்டுவரப்பட்டுள்ளதாக யாழ்.மேலதிக மாகாணக் கல்வித் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தக் கல்வி உபகரணப் பொதிகளை அண்மையில் கொழும்பில் உள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயம் வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (203-224)

## நல்லூர் ஆலயச் சூழலில் துப்புரவுப் பணி ஆரம்பம்

நல்லூர், ஜூலை 2

நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த பெருந்திருவிழா எதிர்வரும் 27ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாக இருப்பதை முன்னிட்டு ஆலயச் சுற்றாடல்களைத் துப்புரவு செய்யும் பணிகள் நேற்று புதன்கிழமை ஆம்பமானது.

ஆலயச் சூழலில் மேற்கொள்ள வேண்டிய சுகாதாரம், குடிதண்ணீர் வசதிகள் குறித்து யாழ்.மாநகரசபை ஆணையாளர் மு.செ.சரவணபவ மாநகரசபை அதிகாரிகளுடன் ஆலோசனைகளை மேற்கொண்டுள்ளார்.

வழமையான நடவடிக்கைகள் குறித்து சம்பந்தப்பட்ட திணைக்கள அதிகாரிகளுடன் கலந்துரையாடப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது. (203-111)

## சுகாதார கண்காணிப்புக் குழு கூட்டம் ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 2

யாழ். பிராந்தியசுகாதார திணைக்களத்தின் கீழ் இயங்கும் வைத்திய நிறுவனங்கள் மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்க ளுக்கு நாளை வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெறவிருந்த மாதாந்தக் கண்காணிப்புக் குழுக் கூட்டம் பிற்போடப்பட்டு எதிர்வரும் 10 ஆம் திகதி காலை 9.30 மணிக்கு நடைபெறும் என பதில் பிராந்திய சுகாதார சேவைகள் பதில் பணிப்பாளர் வைத்திய கலாநிதி க. நந்தகுமாரன் அறிவித்துள்ளார். (201)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Enroll now

# STUDY IN THE UK
## SEPTEMBER 2009 INTAKE

**After graduation you can work full time for two years.**

The University of Salford | Anglia Ruskin University | University of Teesside | Middlesex University | Swansea University Prifysgol Abertawe

**Undergraduate courses**

* Art & Design * Accounting & Financial * Business Management * Computer Science & IT * Engineering * English * Fashion Design * Human Resource Management * Law * Media Studies * Marketing * Nursing * Psychology * Quantity Surveying * Social work

**Postgraduate Courses**

* Accounting and Financial Analysis * Arts Management * Business Management * Computer Science * Engineering * English * Human Resource Management * Law * Marketing * MBA * Nursing * Psychology

தயவுசெய்து உங்களது சான்றிதழ்கள் பிரதிகள், விலாசம், பிறந்த திகதி, தொலைபேசி இலக்கம் ஆகியவற்றை pksuhanthan@yahoo.co.uk என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பவும். (கல்வி ஆலோசகர் மற்றும் விரிவுரையாளர்)

**Our services are absolutely free**

**for expert advice & guidance call now 0777 209446**

KMS
**KNOWLEDGE MANAGEMENT SYSTEMS**
*Leading educational consultants and training providers*
Trusted educational consultants with 11 years experience. Your Success is our Passion

329, Galle Road, Meewella Building, First Floor, Southern Wing, Colombo-0
TEL: +94 11 2555243, FAX: +94 11 2555244
London Office : 1st Floor, 315, High Street North Manor Park, London - E12 6SL Mobile : 0044 7905038050

Jaffna Branch
No. 140, Temple Road, Jaffna

## அளவெட்டி மகாஜனசபையின் திருமண மண்டபத் திறப்பு விழா

அளவெட்டி மகாஜன சபையின் திருமண மண்டபத் திறப்பு விழா இன்று வியாழக் கிழமை பிற்பகல் 4 மணிக்கு வைசுப்பிரமணியம் தலைமையில் நடை பெறும்.

இந்த நிகழ்வில் தெல்லிப்பழை பிர தேச செயலாளர் சு. முரளிதரன் பிரதம விருந்தின ராகக் கலந்து கொண்டு நிலையத்தை திறந்து வைக்கவுள்ளார்.

இந்த நிகழ்வில் கௌரவ விருந்தின ராக சொற்சொற் செல்வர் ஆறுதிருமுருக னும் சிறப்பு விருந் தினராக அளவெட்டி அர சினர் வைத்திய சாலை பொறுப்பதி காரி வைத்திய கலா நிதி க.இராதேயனும் மற்றும் அளவெட் டிப் பிரதேச கிராம அலுவலகர்களும் கலந்து கொள்ள வுள்ளார்கள். (1-86)


# அபிவிருத்தி அதிர்ஷ்டம்
## உத்தியோகபூர்வ முடிவுகள்

1100 நீலம்

வெற்றி இலக்கங்கள்

கடகம் 03 10 17 35

30-06-2009

ஜக்பொட் பரிசு ரூபா. 4,664,500/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 200,541 | 20/- | 4,010,820/- |
| 2 இலக்கங்கள் | 18,451 | 40/- | 738,040/- |
| 1 இல. + லக்கினம் | 18,181 | 60/- | 1,090,860/- |
| 2 இல. + லக்கினம் | 1,742 | 200/- | 348,400/- |
| 3 இலக்கங்கள் | 488 | 1000/- | 488,000/- |
| 3 இல. + லக்கினம் | 52 | 10,000/- | 520,000/- |
| 4 இலக்கங்கள் | 3 | 200,000/- | 600,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 4,664,500/- | - |
| மொத்தம் | | | 7,796,120/- |
| வெற்றிபெறாத டிக்கட்டுகளுக்கான பரிசு | 5 | 100,000/- | 500,000/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 239,463 | | 8,296,120/- |

இந்த வெள்ளிக்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 5,560,350/-

2009 ஜுலை 03 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சிவப்பு நிற டிக்கட்டுக்கள் சீட்டிழுப்புக்குச் செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்குச் செல்லுபடியாகும்.

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் வெற்றி பெறாத டிக்கட்டுகளில் இருந்து ரூபா 100,000/- பரிசு பெறும் சீட்டுக்கள்.

| | |
|---|---|
| கொழும்பு | 400292417-3-31 |
| கண்டி | 400276548-9-12 |
| திருகோணமலை | 400282436-1-48 |
| கொழும்பு | 400277191-8-43 |
| கேகாலை | 400287953-1-49 |

வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை


## ஸ்கந்தாவில் இன்று ஒன்றுகூடல்

சுன்னாகம் ஸ்கந் தவரோதயக் கல் லூரி உயர்தர மாண வர் மன்றத்தின் ஒன்று கூடல் நிகழ்வு இன்று வியாழக்கிழமை நண்பகல் 12மணிக்கு மன்றத் தலைவர் செல்வன் விஜய குமார் கஜரூபன் தலைமையில் நடை பெறவுள்ளது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக் கழகமுகா மைத்துவக் கற்கை நெறியின் சிரேஷ்ட விரிவுரை யாளர் இ. விஜயகுமாரன், சிறப்பு விருந்தினராக யாழ். தேசியக் கல்வி யற் கல்லூரி விரிவு ரையாளர் செல்வி [illegible] யோர் கலந்து கொள் வா. (201)


இலங்கை ஜனநாயக சோசலிசகுடியரசு
பெருந்தெருக்கள், வீதி அபிவிருத்தி அமைச்சு,
வீதி அபிவிருத்தி அதிகார சபை
உள்ளூர் போட்டிக்குரிய கேள்வி கோரல்கள்

**சாவகச்சேரி, புலோலி வீதியில் 8/1 இலக்க மதகு மீள் நிர்மாணம் செய்தல்**

**கேள்வி கோரல் இலக்கம் - RDA/DPR/03/08/01**

1) தலைவர், வீதி அபிவிருத்தி அதிகார சபை, வீதிஅபிவிருத்தி அதிகார சபையின் கேள்விச்சபை சார்பாக, சாவகச்சேரி, புலோலி வீதியில் 8/1 இலக்க மதகு மீள் நிர்மாணம் செய்வதற்கான கேள்வி கோரல்களை, தகுதி வாய்ந்த ஒப்பந்தக்காரரிடம் இருந்து மூடிய கேள்விப்பத்திரங்களாக பெற் றுக்கொள்வார்.

| வேலைவிவரம் | தகுதி | பாதுகாப்புத் தொகை |
|---|---|---|
| கொங்கீறீட் தளம் இட்டு பாலம் மீள் நிர்மாணம் செய்தல் | ICTAD இல் பதிந்திருத்தல் வேண்டும். பாலம் அமைத்தல் தரம் M6/C7 அல்லது அதற்கு மேல் | ரூபா.60,000.00 |

2) கேள்விப்பத்திரங்களை மாகாணப் பணிப்பாளர் அலுவலகம் (வடமா காணம்) வீதி அபிவிருத்தி அதிகார சபை, கடற்கரை வீதி யாழ்ப்பாணம் இடமிருந்து

அல்லது

Director Procurement, வீதி அபிவிருத்தி அதிகார சபை, 673/1, 5 th Lane, Kandewatta Road, பெலவத்த, பத்திரமுல்ல இடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

கேள்விப்பத்திரங்களை எந்தவிதக்கொடுப்பனவும் இன்றி பரிசீலிக்கலாம். கேள் விப்பத்திரங்கள் 02.07.2009 இலிருந்து 22.07.2009 வரை மீளளிக்கப் படாத தொகையாக ரூபா 1680.00 (வற் வரி உள்ளடங்கலாக) செலுத்தி பணமாகவோ அல்லது வங்கி வரை வாகவோ செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.

3) மதிப்பீடு செய்யப்பட்ட நேரடி நிர்மாணத்தொகை ரூபா 5.75 மில்லி யன்கள்.

4) நிர்மாண காலம் 266 நாள்கள் ஆகும்.

5) கேள்விப்பத்திரங்கள் 77 கலண்டர் நாள்களுக்கு கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும் திகதியிலிருந்து செல்லுபடியாகும்.

6) முன் கேள்வி கோரல் கூட்டம் 16.07.2009 அன்று மு.ப. 10 மணிக்கு பிரதான பொறியியலாளர் அலுவலகம், கடற்கரை வீதி யாழ்ப்பாணத்தில் நடைபெறும்.

7) பாதுகாப்புக்கட்டுப்பணத்துடன் கூடிய மூடிய கேள்விப்பத்திரங்கள் பதிவுத்தபால் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ பொது முகாமையாளர், வீதி அபிவிருத்தி அதிகாரசபை, முதலாம் மாடி, செத்சிறிபாய, பத்திர முல்ல என்று விலாசமிடப்பட்டு 23.07.2009 பி.ப. 2 மணிக்கு முன் கிடைக் கக்கூடியதாக அனுப்பப்படல் வேண்டும்.

8) கேள்வி கோரல் நேரம் முடிவடைந்த உடன் உடனடியாக வீதி அபிவிருத்தி அதிகார சபை, முதலாம் மாடி, செத்சிறிபாய, பத்திரமுல்ல இல் உள்ள பொது முகாமையாளர் அலுவலகத்தில் திறந்து பார்க்கப்படும்.

கேள்விப்பத்திரம் சமர்ப்பித்தவர்கள் அல்லது அவர்களது முகவர்கள் கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும் நேரத்தில் பிரசன்னமாகி இருக்கும் வண்ணம்வேண்டப்படுகிறீர்கள்.

9) மேலதிக தகவல்களைப் பெற 0112787077 என்ற தொலைபேசி இலக்கம் மூலம் Director Procurement அவர்களையோ அல்லது 024 222 2942 என்ற தொலைபேசி இலக்கம் மூலம் மாகாணப்பணிப்பாளரையோ (வடமாகாணம்) அல்லது 021 222 2968 என்ற தொலை பேசி இலக்கம் முலம் பிரதம பொறியியலாளரையோ (வீதி அபிவிருத்தி அதிகார சபை, யாழ்ப்பாணம்) தொடர்பு கொள்ளலாம்.

தலைவர் R.D.A கேள்விச்சபை,
வீதி அபிவிருத்தி அதிகார சபை,
செத்சிறிபாய, பத்திரமுல்ல.

(C/559310)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாகாண மட்ட விளையாட்டுப் போட்டிகள் மன்னார் பொது மைதானத்தில் நாளை ஆரம்பம்

வலி.வடக்கு,ஜூலை2

வடமாகாண கல்வித் திணைக்களம் நடத்தும் மாகாண மட்டக் குழுநிலைப் போட்டிகள் நாளை வெள்ளிக்கிழமை தொடக்கம் 10ஆம் திகதி வரை மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் இருந்து மாகாணப் போட்டிகளில் கலந்துகொள்ளவுள்ள ஆண், பெண் அணிகளின் விவரங்கள் வருமாறு:

**பெண் அணிகள்**

**வலைப்பந்தாட்டம்**

*15 வயதுப்பிரிவு:* தெல்லிப்பழை யூனியன் கல்லூரி, பொன்னாலை வரதராஜப் பெருமாள் வித்தியாலயம்,

*17வயதுப் பிரிவு:* தெல்லிப்பழை யூனியன் கல்லூரி, பருத்தித்துறை மெதடிஸ் பெண்கள் உயர்தரப் பாடசாலை

*19 வயதுப் பிரிவு:* தெல்லிப்பழை யூனியன் கல்லூரி, கொக்குவில் இந்துக் கல்லூரி.

**கரப்பந்தாட்டம்**

*15 வயதுப்பிரிவு:* அளவெட்டி அருணாசலம் வித்தியாலயம், அளவெட்டி அருணோதயாக் கல்லூரி.

*17 வயதுப் பிரிவு:* தெல்லிப்பழை மகாஜனக்கல்லூரி, சங்கானை சிவப்பிரகாசம் வித்தியாலயம்.

*19 வயதுப் பிரிவு:* சங்கானை சிவப்பிரகாசம் வித்தியாலம், தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி.

**எல்லே**

அளவெட்டி அருணோதயாக் கல்லூரி, மருதங்கேணி மணற்காடு றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை.

**மேசைப்பந்தாட்டம்**

யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி, தெல்லிப்பழை யூனியன் கல்லூரி.

**கூடைப்பந்தாட்டம்**

யாழ்ப்பாணம் திருக்குடும்பக் கன்னியர் மடம் பாடசாலை, உடுவில் மகளிர் கல்லூரி.

**கரம்**

*15 வயதுப் பிரிவு:* யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி, வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி.

*19 வயதுப் பிரிவு:* யாழ்ப்பாணம் வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி.

**சதுரங்கம்**

*15 வயதுப் பிரிவு:* தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி, யாழ்ப்பாணம் வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை.

*19 வயதுப் பிரிவு:* யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி, வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி.

**பூப்பந்தாட்டம்**

சுண்டுக்குளி மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி.

**உடற்பயிற்சி**

மானிப்பாய் மகளிர் கல்லூரி, இளவாலை கன்னியர்மடம் பாடசாலை.

**ஹொக்கி**

உடுவில் மகளிர் கல்லூரி, அளவெட்டி அருணோதயாக் கல்லூரி.

**ஆண் அணிகள்**

**உதைபந்தாட்டம்**

*17 வயதுப் பிரிவு:* ஏழாலை ஸ்ரீ முருகன் வித்தியாலயம், ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி.

*19 வயதுப் பிரிவு:* யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி, புங்குடுதீவு மகா வித்தியாலயம்.

**கரப்பந்தாட்டம்**

*15 வயதுப் பிரிவு:* ஆவரங்கால் மகாஜனா வித்தியாலயம், உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி.

*17 வயதுப் பிரிவு:* புத்தூர் சோமஸ்கந்தாக் கல்லூரி, உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி.

*19 வயதுப் பிரிவு:* புத்தூர் சோமஸ்கந்தாக் கல்லூரி, அச்சுவேலி மகாவித்தியாலயம்.

**கிரிக்கெட்**

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி, தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி.

**எல்லே**

நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம், கொக்குவில் இந்துக் கல்லூரி.

**கபடி**

இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலயம், வடமராட்சி பருத்தித்துறை கலட்டி றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை.

**கூடைப்பந்தாட்டம்**

யாழ்ப்பாணம் மத்தியகல்லூரி, யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரி.

**மேசைப்பந்தாட்டம்**

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி, யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரி.

**கரம்**

*15 வயதுப் பிரிவு:* யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரி, உடுவில் மான்ஸ் மகாவித்தியாலயம்.

*19 வயதுப் பிரிவு:* யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரி, கொக்குவில் இந்துக் கல்லூரி.

**சதுரங்கம்**

*15 வயதுப் பிரிவு:* பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி.

*19 வயதுப் பிரிவு:* பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி.

**உடற்பயிற்சி**

ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி, இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி.

**பூப்பந்தாட்டம்**

யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரி, மானிப்பாய் இந்துக்கல்லூரி.

**ஹொக்கி**

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி, யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரி.

**ரெனிஸ்**

யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரி, யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரி.

(50-86)



யாழ்.இந்து ஆரம்ப பாடசாலையின் முதன்மைநிலை ஒன்றிற்கான இல்ல மெய்வல்லுநர் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட 'நிக்கோட்' நிறுவனத்தின் உதவிச் செயற்திட்டப் பணிப்பாளர் என்.எஸ்.ஆர்.சிவரூபன், அவரின் துணைவியாரான யாழ்.பல்கலைக்கழக விரிவுரையாளர் திருமதி அபிராமி சிவரூபன் ஆகியோர் பாடசாலை சமூகத்தினரால் அழைத்துவரப்படுவதையும், நிகழ்வில் பாடசாலை அதிபர் வே.ஞானகாந்தன் தலைமையுரை ஆற்றுவதையும் படங்களில் காணலாம். (படங்கள்: நந்தன்)

# நுணாவில் பாரதி வி.கவை வென்று சம்பியனானது சாவகச்சேரி ஸ்ரீமுருகன்

யாழ்ப்பாணம்,ஜூலை2

கைதடி மின்னொளி விளையாட்டுக் கழகத்தினால் நடத்தப்பட்ட கிரிக்கெட் போட்டியில் சாவகச்சேரி ஸ்ரீமுருகன் விளையாட்டுக் கழக அணி நுணாவில் பாரதி விளையாட்டுக்கழக அணியை 82 ஓட்டங்களால் வென்று சம்பியனாகியது.

கழக மைதானத்தில் நடைபெற்ற சுற்றுப்போட்டியின் இறுதிப்போட்டி அண்மையில் நடைபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஸ்ரீமுருகன் வி.க. அணி 147 ஓட்டங்களைப் பெற்றது. 148 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய பாரதி அணி 65 ஓட்டங்களில் சுருண்டது.

போட்டியின் ஆட்டநாயகன், தொடர் நாயகன், சிறந்த பந்துவீச்சாளர் ஆகிய விருதுகளை சாவகச்சேரி ஸ்ரீமுருகன் வி.க. அணியைச் சேர்ந்த பா.உதயசந்தர் பெற்றுக் கொண்டார்.

சுற்றுப்போட்டியில் தென்மராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்த 32 கிரிக்கெட் அணிகள் பங்குபற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (50-207)

# சென்.பற்றிக்ஸ் அணியுடனான ஆட்டத்தில் வெற்றி பெற்றது யாழ்.இந்துக் கல்லூரி

வலி.வடக்கு,ஜூலை2

இலங்கைப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தினால் யாழ்ப்பாணப் பாடசாலைகளின் 15 வயதுப் பிரிவினர்களுக்கு இடையே நடத்தப்படும் 50 ஓவர்களுக்கு மட்டுப்படுத்திய கிரிக்கெட் போட்டி ஆட்டமொன்றில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி வெற்றிபெற்றுள்ளது.

யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற போட்டி ஆட்டமொன்றில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியும் யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரியும் மோதிக்கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரி 50 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்டுகளை இழந்து 175 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

அஜித் 43 ஓட்டங்களையும், கஜேந்திரன் 30 ஓட்டங்களையும், பானுஜன் 15 ஓட்டங்களையும், ஜக்சன் 13 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டதுடன் உதிரிகளாக 47 ஓட்டங்களும் பெறப்பட்டன.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியைச் சேர்ந்த கல்கோபன் 10 ஓவர்கள் பந்துவீசி 4 ஓட்டமற்ற ஓவர்களுடன் 31 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுகளையும், மதுசன் 10 ஓவர்கள் பந்துவீசி 4 ஓட்டமற்ற ஓவர்களுடன் 24 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுகளையும், கௌசிகன் 10 ஓவர்கள் பந்துவீசி ஓர் ஓட்டமற்ற ஓவருடன் 38 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள்.

176 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி 46 ஓவர்களில் 6 விக்கெட்டுகளை இழந்து 176 ஓட்டங்களைப் பெற்று வெற்றி இலக்கை அடைந்தது.

சஜீவன் 52 ஓட்டங்களையும், சஜீகன் 32 ஓட்டங்களையும், கல்கோபன் 19 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டதுடன் உதிரிகளாக 56 ஓட்டங்களும் பெறப்பட்டன.

யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரியைச் சேர்ந்த லிவிங்டன் 9 ஓவர்கள் பந்துவீசி 2 ஓட்டமற்ற ஓவர்களுடன் 22 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுகளையும், கஜேந்திரன் 10 ஓவர்கள் பந்துவீசி 6 ஓட்டமற்ற ஓவர்களுடன் 23 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுகளையும், ஜெயந்தன் 5 ஓவர்கள் பந்துவீசி 12 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள். (50-86)

# விளையாட்டு வீரர்கள் இன்று மன்னார் புறப்படுகின்றனர்

வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தினால் மாகாண மட்டத்தில் பாடசாலை அணிகளுக்கு இடையே நாளை நடைபெறவுள்ள விளையாட்டுப் போட்டிகளில் கலந்துகொள்வதற்காக யாழ்.மாவட்ட அணியில் ஒரு பகுதியினர் இன்று வியாழக்கிழமை 4 மணிக்குப் புங்குடுதீவு குறிகாட்டுவானிலிருந்து மன்னாருக்குப் புறப்படவுள்ளனர். இவர்கள் நேற்று செல்லவிருந்தபோதும் தவிர்க்கமுடியாத காரணத்தால் அது நடைபெறவில்லை.

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளரும் சமூகசேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தாவின் ஏற்பாட்டில் கடற்படையினரின் உதவியுடன் இன்று அவர்கள் கப்பலில் செல்லவுள்ளனர். (50-325)

## குடாநாட்டு விளையாட்டு அரங்குகளில்

# கரணவாய் ம.வி. வீரர்கள் மூவர் மாகாணப் போட்டிக்கு

யாழ்ப்பாணம்,ஜூலை2

கரணவாய் மகாவித்தியாலயத்திலிருந்து மூன்று மாணவர்கள் மாகாண மட்ட மெய்வன்மைப் போட்டிகளில் கலந்து கொள்வதற்குத் தெரிவாகியுள்ளனர்.

13 வயதுக்குட்பட்டோருக்கான ஆண்கள் பிரிவில் கனகசிங்கம் சிவகிருஷன் 00 மீற்றர், 200 மீற்றர் ஓட்டப்போட்டிகளில் மாவட்ட மட்டத்தில் முதலாம் இடங்களைப் பெற்று மாகாணப் போட்டிக்குத் தெரிவாகியுள்ளார்.

17 வயதுக்குட்பட்டோருக்கான ஆண்கள் பிரிவில் சந்திரசேகரம் ஜங்கரன் மாவட்ட மட்டத்தில் 1500 மீற்றர் ஓட்டத்தில் முதலாம் இடத்தையும் 400 மீற்றர் ஓட்டத்தில் இரண்டாம் இடத்தையும் பெற்றுக் கொண்டார். புஸ்பராசா தாஸ்மோகன் 400 மீற்றர் தடைதாண்டல் ஓட்டத்தில் இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளார். இவர்கள் இருவரும் மாகாணப் போட்டிகளில் கலந்து கொள்ளவுள்ளனர். (50)



வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியினால் டாக்டர் பீரிஸ்பூ.ஆர்.தோமஸ் வெற்றிக்கிண்ணத்திற்காக யாழ்.மாவட்டப் பாடசாலைகளின் 19 வயதுப்பிரிவு ஆண்கள் பிரிவுகளுக்கிடையே நடைபெற்ற லீக் முறையிலான கூடைப்பந்தாட்டப் போட்டியில் சம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்ட யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி வீரர்களையும் இரண்டாம் இடத்தைப் பெற்ற யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரி அணி வீரர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்: நேசன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிளாஸ்டிக் பாத்திரப் பாவனை நச்சுத்தன்மை ஆபத்து

**கேள்வி:** எனக்குக் குளிர்ந்த நீர் அருந்துவது மிகவும் பிடிக்கும். பிளாஸ்ரிக் போத்தல்களில் நீரைப்பிடித்து - குளிர்சாதனப் பெட்டியில் வைத்துக் கொண்டு குடித்து வருவேன். சமீபத்தில் வெளிநாட்டில் டாக்டருக்குப் படித்துக் கொண்டிருக்கும் ஓர் உறவினர் - இங்கு வந்திருந்தபோது - நான் பிளாஸ்ரிக் போத்தலில் நீர்குடிப்பதைக் கண்டு - இந்தப் பழக்கத்தால் புற்று நோய் ஏற்படும் என்று கூறியுள்ளார். இது உண்மையா? மருத்துவ ஆதாரங்களுடன் விளக்குவீர்களா?

**பதில்:** பிளாஸ்ரிக் பாத்திரங்களில் நீர், உணவு வைத்து உபயோகப்படுத்துவது உடல் நலத்துக்குச் சிறந்ததல்ல என்று மருத்துவ உலகில் ஒரு கருத்து நிலவுகிறது. இதற்கு உலகில் சிறந்த மருத்துவர்களும் ஆதரவு தந்துள்ளார்கள். எட்வர்ட் பியுஜி மோட்டோ என்ற பிரபல அமெரிக்க டாக்டர், பிளாஸ்ரிக் உபயோகத்துக்கு எதிராகப் பிரசாரம் செய்து வருபவர்களில் முக்கியமானவர். அவர் பிளாஸ்ரிக் பாத்திரங்களில் அடைக்கப்பட்டு வரும் உணவுகளை 'மைக்கிறோவேவ்' அடுப்புக்களில் வைத்துச் சூடாக்கி - உண்பது முக்கியமாக மேற்குலக நாடுகளில் தினமும் நடைபெற்றுவரும் சாதாரண விஷயம் என்று கூறியுள்ளார். எமது நாட்டிலும் இது மெல்ல மெல்லப் பரவிவருகிறது. எண்ணெய்த் தன்மை கொண்ட இப்படியான உணவுகளைப் பிளாஸ்ரிக் பாத்திரத்தில் வைத்துச் சூடாக்கும் போது - பிளாஸ்ரிக்கிலிருந்து Dioxin என்ற கொடிய நஞ்சுப் பொருள் உணவுப் பொருட்களில் கலந்து - உடலுக்குள் செல்கின்றது. இந்த 'டயக்ஸின்' நஞ்சு, உடற்கலங்களில் தீய விளைவுகளை உருவாக்கி - புற்று நோய் ஆரம்பிக்கக் காரணமாகிறது.

இந்த 'டையோக்ஸின்' என்ற இரசாயனத்தை Pre Cancerous அதாவது புற்று நோய்களின் காரணி என்று கூறுவர். மார்பகப் புற்று நோய்க்கு இந்த டையோர்க்ஸின் ஒரு முக்கிய காரணம் என்பதை உலகின் பிரபல வைத்தியசாலை ஆய்வாளர்கள் - John Hopking மருத்துவமனை ஆய்வாளர்கள் - சந்தேகமற நிரூபித்துள்ளார்கள். எனவே, உணவைப் பிளாஸ்ரிக் பாத்திரங்கள், பிளாஸ்ரிக் உறைகளோடு வைத்துச் சூடாக்கவோ, சமையல் செய்யவோ வேண்டாம் என்று இவர்கள் அறிவுறுத்துகின்றார்கள். அதேவேளையில் - பிளாஸ்ரிக் பாத்திரங்களில் உணவு, நீர் என்பவற்றை வைத்துக் குளிரவைப்பதும், டையோஸின் பூச்சுப் பொருட்களை அவற்றோடு சேரவைக்கும் என்று விஞ்ஞானிகள் நம்புகின்றார்கள். எமது நாட்டில் - குளிர்பானங்கள் 'மெகா' பிளாஸ்ரிக் போத்தல்களிலும், Buddy பிளாஸ்ரிக் போத்தல்களிலும் வருவதால் - நாம் சிக்கனம் கருதி, பாவனைக்குப் பின்னர் இவற்றை வீசி எறியாமல், குடிதண்ணீர் சேகரித்து வைக்க உபயோகிக்கின்றோம். விளைவுகளை, அபாயங்களை தெரிந்து கொண்டும், நாம் இவற்றை உபயோகிப்பதைத் தவிர்த்தல் எமக்கு நல்லதல்லவா?

***

**கேள்வி:** வயது 39. கண்கள் எரிவது போன்ற உணர்வு (Burning Feeling) எனக்கு ஏற்படுவதுண்டு. எனது கண்கள் எப்பொழுதும் சிவந்தும், மஞ்சள் நிறமாகவும் இருக்கும். சிலவேளைகளில் தாங்க முடியாத தலைவலி ஏற்படும். கண்ணாடி உபயோகிப்பதில்லை. மதுபானம் எடுப்பதில்லை. ஆனால், நன்றாக புகையிலை - வெற்றிலை அடிக்கடி மெல்லுவேன். எனது பிரச்சினைக்குத் தீர்வு கூறவும்.

**பதில்:** புகையிலை மெல்லுவது கண்களை சிவக்கவைக்கும். மஞ்சள் நிறத்தைக் கண்களுக்குத் தரும். இதைவிட, கண்களில் தேவையான அளவு கண்ணீர் சுரக்காதபோதும், கண்கள் வரண்டு இருக்கும் போதும் இவ்வாறு ஏற்படலாம். அதேபோல் - பிரகாசமான வெளிச்சம் உள்ள சூழலில் பணிபுரிபவர்களுக்கும் கடும் காற்று வீசும் போது அதிகளவில் கண்ணீர் சுரந்தும் இவ்வாறு கண் சிவந்து, மஞ்சள் நிறமாகக் காணப்படும்.

***

**கேள்வி:** நான் பல் துலக்குவதில்



குறைந்தது பத்து நிமிடமாவது காலையில் செலவிடுவேன். பற்தூரிகை கொண்டு சிறந்த பற்பசை உபயோகித்து பல்துலக்குவேன். நீண்ட நேரம் பற்களைத் தேய்க்கும்போது, பற்களின் எனாமல் (Enamel) தேய்ந்து - விரைவில் பற்கள் கெட்டுவிடும் என்கின்றார்கள். அது உண்மையா? பல் துலக்குவதற்கு ஏதாவது சொல்லப்பட்ட முறைகள் உள்ளனவா? விவரமாகத் தருக.

**பதில்:** பற்களைப் பற்தூரிகை கொண்டு - சரியான முறையில் இரண்டு நிமிடநேரம் துலக்கினாலே போதும் என்று ஆய்வுகள் தெரிவிக்கின்றன. நீண்டநேரம் துலக்குவதும், அழுத்தித் தேய்ப்பதும் - கடின மயிர்களைக் கொண்ட தூரிகைகளை உபயோகிப்பதும் பற்களுக்குப் பாதுகாப்பு அளிக்கும் Enamel என்ற வெள்ளைப்பசையைத் தேயச்செய்து பற்களைப் பாதிக்கும். பற்களை துலக்கும்போது கடைப்பிடிக்க வேண்டிய வழிமுறைகளைப் பார்ப்போம்.

தூரிகையை பற்களின் முரசுக்கு 45° சாய்வு கோணத்தில் பிடித்து, முரசிலிருந்து கீழாக அல்லது கீழ்வரிசைப் பற்களெனின் முரசிலிருந்து மேலாக 'வழித்தெடுப்பது' (Sweeping) போன்று துலக்க வேண்டும். முதலில் மேல்வரிசைப் பற்களையும் அடுத்து கீழ்வரிசைப் பற்களையும் துலக்க வேண்டும். மேல்வரிசை, கீழ்வரிசைப் பற்களின் உட்பகுதிகளையும் மேற் கூறிய முறையில் கிரமமாகச் செய்ய வேண்டும்.

அதன் பின்னர் - பற்களின் மேற் பரப்பை - சப்பிச் சாப்பிடும் பரப்பை (Cewing Surfaces) தூரிகை கொண்டு முன்னும் பின்னுமாகத் துலக்கவேண்டும். இறுதியாகத் தூரிகை கொண்டு நாக்கின் மேற்பரப்பை வழிக்க வேண்டும். இதனால் நாக்கின் மேற்பரப்பிலுள்ள பற்றீரியாக்கள் கழியப்படுவதுடன் - வாயில் துர்நாற்றமும் இல்லாமல் போகும்.

பற்களைத் துலக்கும் போது மிகவும் உரத்துத் தேய்க்கக்கூடாது. - முரசு விளிம்புகள், கொடுப்புக்குள் உள்ள பற்கள் என்பவற்றுக்குள் அழுக்குகள் தேங்கிநிற்காமல் கவனித்துத் துலக்கவேண்டும். கடின மயிர்கள் உள்ள தூரிகையை (HARD BRUSHES) பல் வைத்தியர் சிபார்சு செய்தாலொழிய நீங்கள் உபயோகிக்கக் கூடாது. மிருதுவான தூரிகைகளே பொதுவாக உபயோகிக்கப்பட வேண்டும். பல் தூரிகைகளின் தலைப்பகுதி - குறுகியதாக இருப்பின், பற்கள், வாய், தந்தங்களின் [illegible] துப்புரவு செய்[illegible] இருக்கும். பல் துலக்க - பற்பசை முக்கியம் என்பது கட்டாயமல்ல. பற்களின் சுகாதாரத்தைச் சரிவரப் பராமரித்து வந்தால் - சாதாரண உப்பு நீர் கொண்டே பற்களைத் துலக்கலாம். பற்களின் சுகாதாரத்தைக் கவனத்தில் எடுத்து, அதற்கேற்ப மருத்துவக் குணம் கொண்ட பற்பசையை உங்கள் பல் மருத்துவர் சிபார்சு செய்வார். உபயோகிக்கும் பற்தூரிகை நன்றாக மயிர்கள் வளைந்து தேயும் வரை உபயோகிக்கக் கூடாது. எப்படியென்றாலும் மூன்று மாதத்துக்கு ஒரு தடவையாவது தூரிகையை மாற்ற வேண்டும்.

***

**கேள்வி:** எனது கணவர் வயது 55. சமீபத்தில் மாரடைப்பு ஏற்பட்டு - By Pass என்ற சத்திரசிகிச்சை செய்யப்பட்டது. சத்திர சிகிச்சை நடந்து இரண்டு மாதங்களாகி விட்டன. இருதய சிகிச்சை செய்தவர்கள் உடலுறவில் ஈடுபடுவதால் பாதிப்பு ஏற்படுமா? கணவர் உடலுறவில் விருப்பமில்லாதது போல் சிலவேளைகளில் செயல்படுகிறார்.

**பதில்:** உடலுறவு என்பது சாதாரண

இலவச மருத்துவ ஆலோசனை பொழுங்கள்
நீங்களும் கேள்விகளை அனுப்பி மருத்துவ ஆலோசனைகளைப் பெறலாம்.
நீண்ட கால அனுபவம் உள்ள பிரபல டாக்டரும் விஞ்ஞானத்துறை எழுத்தாளருமான
டாக்டர் எஸ்.அருள்ராமலிங்கம்
பதில் தருகிறார்.
இலவச மருத்துவ ஆலோசனை
உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

காம உணர்வு மாத்திரமல்ல, ஆண் பெண் இருபாலாரையும் தனிமை (Isolation) உணர்வினின்று பாதுகாக்கும் உணர்வும் கூட. உடலுறவின் போது நடைபெறும் தொடுதல், அணைத்தல், முத்தமிடல் மற்றும் பாலியல் கற்பனைகள் போன்ற பாலியல் உணர்வுகளை வெளிப்படுத்தும் சைகைகள் உள்ளத்தின் பதற்றநிலை மற்றும் மன இறுக்கத்துக்கு ஒரு மருந்தாக விளங்குகின்றன. ஆனால் இருதய நோயாளிகளும், அவர்களது துணைகளும் உடலுறவை ஒரு பதற்ற வெளிப்பாடு, மன இறுக்கநிலை - ஏன் உயிராபத்து ஏற்படக்கூடிய செயல் என்று கருதுவதுண்டு. இருதய நோயாளிகளுக்குப் பொதுவாகவே பாலியல் இச்சை குறைவாக இருக்கும். இதனால் உணர்ச்சிகள் அடக்கப்பட்டு - ஆண்களுக்கு விறைப்பு (Erection) நிலை ஏற்படுவது குறைகிறது. ஒரு சிலருக்கு உடலுறவுக்கு முன்னரே துரித விந்து வெளிப்பாடு (Premature Ejaculation - கூட ஏற்படலாம். ஆனால், இந்தக் குணங்கள் இருதய சிகிச்சைக்கு பின்னர் மட்டும் ஏற்படுவதில்லை. சாதாரண மனிதர்களில் 40 வீதமானோர் இப்படியான குறைபாடுகளைக் கொண்டிருப்பதை நினைவில் கொள்ளவேண்டும். கணவன் மனைவியிடையே ஒரு திடமான மன - உளத் தொடர்பு இருக்குமானால் மாரடைப்பின் பின்னர் ஏற்படக்கூடிய பாலியல் திருப்தியின்மை குறைவாகவே காணப்படும். இன்னொரு விஷயத்தையும் இங்கு குறிப்பிடவேண்டும். இந்த மாரடைப்பின் பின்னர் பாலியல் பற்றிய பல ஆய்வுகள் - ஆண்களைப் பிரதானமாகக் கொண்டே நடத்தப்பட்டன. சில ஆய்வுகளே - மாரடைப்பின் பின்னர் பெண்களின் பாலியல் உணர்வு பற்றி நடத்தப்பட்டன. எனினும் கீழேதரப்படும் கருத்துகள் பொதுவாக இருபாலினர்களுக்கும் பொருத்தமானவையாகவே தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளன.

மாரடைப்பின் பின்னர் பாலியல் செயற்பாடு இரண்டு மனோவியல் விளைவுகளின் காரணமாக ஏற்படுகின்றது. ஒன்று Anxiey எனப்படும் மன உளைவு. உடலுறவின் போது திரும்பவும் மாரடைப்பு ஏற்படுமோ என்ற பய உணர்வு இந்த மன உளைச்சலைத் தருகிறது. இந்த அச்ச உணர்வு உடலுறவின் போது ஏற்படும் உடலியல் தேவை எவை, எப்பொழுது உடலுறவை ஆரம்பிப்பது போன்ற தெளிவற்ற கருத்து, தற்செயலாக உடலுறவின் போது நெஞ்சு வலி வந்தால் என்ன செய்வது என்ற அறியாமை - என்பவற்றால் ஏற்படுகிறது.

மாரடைப்பு போன்ற நோய்களின் பின்னர் - தாங்கள் முழுமையான, முழுச்சக்தியுள்ள மனிதனாகவோ, பெண்ணாகவோ இல்லை என்ற தாழ்வுமனப்பான்மை. இதுவும் மனஉளைவை ஏற்படுத்துகிறது.

அடுத்ததாக Depression என்கின்ற மனச்சோர்வு நிலை. மாரடைப்பின் பின்னர் சாதாரணமாகவே மனச்சோர்வு ஏற்படுவது வழக்கம். இதனால் தம்பதிகளிடையே ஒரு புரிந்துணர்வு, ஏற்படாமல் வழக்கமான சாதாரண தாம்பத்திய உணர்வுகள் திரும்புவதில்லை. இதனால் பாலியல் உறவுகளில் விருப்பமின்மை ஏற்படுகின்றது. இது சிலவேளைகளில் ஆண்மைத் குறைவுக்குக் காரணமாக அமைவதுமுண்டு.

உண்மையில், உடலுறவின் போது ஏற்படும் உடலியல் முயற்சி - Physical Effort, ஒரு இருமாடி உயர படிக்கட்டுக்களை ஏறுவதற்கு அல்லது - துரிதமாக நடப்பதற்குச் சமமானது. இதய சிகிச்சையின் பின்னர் அநேகமாக 4-6 வாரங்களின் பின்னர் - இருதய நிபுணர்கள் - Stress Test என்கின்ற விரைவாக நடக்கும் பரிசோதனை, Echo Test என்கின்ற இதய பரிசோதனை ஆகியவற்றைச் செய்த பின்னரே - நோயாளியைச் சாதாரண வாழ்க்கைக்கு அனுமதிப்பர். அப்படிக் கூறிய பின்னர் இவர்கள் உடலுறவுக்குத் தயார் என்பதே கருத்து. எனினும், உடலுறவின் போது - ஏதோ நூறு யார் பந்தயத்தில் பங்கு பற்றுவது போல் - வேகம், ஆர்வம், பத்றம் போன்றவை இருக்கக் கூடாது. உடலுறவின் முன்னர் உணர்ச்சி ஊட்டும் செய்கைமுறைகள் - Foreplay கட்டாயம் பின்பற்றப்பட வேண்டும். இது இதயத்தை உடலுறவுக்கு தயார்ப்புடுத்தும். ஓட்டப்பந்தயத்தில் - தயாராகமுன்னர் செய்யப்படும் Warm Up பயிற்சிகள் போன்றது. Foreplay மற்றும் - உடலுறவு, உணவு உட்கொண்டு இரண்டு மணி நேரத்துக்குப் பின்னர் கொள்வது இதயத்துக்கு பாரிய இறுக்கத்தை, சோர்வைத் தராது. அதே வேளையில் மிக களைப்பு, பதற்றம், சினம், விரைவில், செய்து முடிக்க வேண்டும் என்ற கால எல்லை என்பவை உடலுறவின் போது இதய நோயாளிகள் தவிர்க்க வேண்டியவை. எனவே மேற் கூறிய கருத்துகளைப் பின்பற்றி - இன்புற்று வாழுங்கள்.

***

(கடந்த திங்கட்கிழமை இடப் பிரச்சினை காரணமாக இந்தப் பக்கம் வெளியாகவில்லை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று பொன்விழாக் காணும் நாகபூஷணி அமுதசுரபி அன்னதான சபை



இற்றைக்கு 50 ஆண்டுகளுக்கு முன்னர் நயினை நாகபூஷணி அம்மனைத் தரிசிக்க நயினாதீவுக்கு வரும் அடியார்களது பசி போக்கி உதவும் நற்பணியை ஆரம்பித்து இன்றுவரை அப்பணியைச் சிறப்புற ஆற்றிவரும் நயினை நாகபூஷணி அமுதசுரபி அன்னதானசபை இன்று பொன்விழாக் காண்கிறது.
அதையொட்டி இவ் ஆக்கம் இங்கு பிரசுரமாகிறது.

வரலாற்றுச் சிறப்பும், ஆன்மீகப் பொலிவும் பெற்று, சைவமும் தமிழும் தழைத்தோங்குகின்ற புண்ணிய பூமியாகிய நயினையம்பதியில் கோயில் கொண்டெழுந்தருளியிருந்து அகிலமெல்லாம் அருள் சுரந்துகொண்டிருப்பவள் அன்னை ஸ்ரீ நாகபூஷணி. வருடந்தோறும் அன்னையின் ஆலயத்தில் ஆனி மாதத்தில் நடைபெறும் பெருந்திருவிழாவில் அம்பிகையைத் தரிசிக்கவும் நேர்த்திக்கடன்களை நிறைவேற்றவும் நாட்டின் பல பாகங்களிலுமிருந்தும் அடியார்கள் பெருந்திரளாக நயினையம்பதியில் கூடுவார்கள்.

நயினையம்பதிக்கு அன்னையின் அருளைப் பெற்றுக்கொள்வதற்காக் வருகை தருகின்ற பல்லாயிரக்கணக்கான அடியார்களுக்கு ஏற்பட்டு வந்த உணவுக் கஷ்டத்தை நீக்கி உதவ, அன்புள்ளங் கொண்ட நயினைத் தர்மசீலர்கள் சிந்தித்தார்கள். இவர்களது சிந்தனையில் [illegible]ப்பட்ட எண்ணம் செயல்வடிவம் [illegible]ற்று "நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் யாத்திரீகர்களின் அன்னதான சபை" என்ற நாமத்துடன் 1960ஆம் ஆண்டு சபையொன்று ஸ்தாபிக்கப்பட்டது. இருபத்தைந்து உறுப்பினர்களைக் கொண்ட சபையாக அது உருப்பெற்றது.

"அன்பர் பணிசெய்ய எம்மை
ஆளாக்கிவிட்டுவிட்டால்
இன்பநிலை தானே வந்தெய்தும்
பராபரமே"

என்ற ஆன்றோர் வாக்கிற்கமைவாக அன்புள்ளங்கொண்ட தர்மசீலர்களாலும், தனவந்தர்களாலும் மனமுவந்து அளிக்கப்பட்ட பொருளுதவி கொண்டு இவ் அன்னதானப் பணி 1960ஆம் ஆண்டு முதல் இன்று வரையும் சிறப்பாக நடைபெற்று வருகின்றது. "மக்கள் சேவையே மகேசன் சேவை" என்னும் முதுமொழிக்கிணங்க 1960ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட அன்னதான சபையின் இவ் இருபத்தைந்து ஆரம்ப கர்த்தாக்களின் நன்னோக்கமும், நல்லாசிகளுமே இவ் அன்னதான சபையின் வளர்ச்சிக்கு உறுதுணையாக அமைந்தன. அம்பிகை அடியார்களது உணவுக் கஷ்டத்தை நீக்க வேண்டுமென எண்ணிச் செயற்பட்டு பெரும்பணியாற்றிய, இன்றும் ஆற்றிவரும் சபையின் ஆரம்ப கர்த்தாக்கள் நினைவில் கொள்ளத்தக்கவர்கள் ஆவர். சமய, சமூகப் பணியாற்றிய இப்பெரியார்களது தொண்டு அன்னதான சபையின் சரித்திரத்தில் இடம்பெறவேண்டியவர்களே. இதற்கமைவாக இவர்களது உருவப்படங்கள் அன்னதான சபை மண்டபத்தில் திரைநீக்கம் செய்யப்பட்டுள்ளன.

இவ் அன்னதான சபையின் பணி அன்றுமுதல் இன்றுவரை சிறப்புடன் நடைபெற்று வருகின்றது. 1963ஆம்

**நா.க.குமாரசூரியர் ஜே.பி**
**அமுதசுரபி அன்னதான சபை உறுப்பினர், நயினாதீவு.**

ஆண்டில் அன்னதானப் பணி இடம்பெற்று வந்த பாரிய கொட்டகை திடீரென ஏற்பட்ட தீயினால் எரிந்துவிட்டபோதும் உணவுப் பொருள்களுக்கும், தொண்டர்களுக்கும் எதுவித பாதிப்பும் ஏற்படவில்லை. சபையின் அவ்வேளைய தலைவர் மற்றும் ஏனைய உறுப்பினர் களின் அயராத முயற்சியினால் உடனடியாக அதேபோன்ற பாரிய கொட்டகை ஒன்றை நிறுவி அன்னதானப் பணி தொடர்ந்தது.

அத்தீவிபத்தையடுத்து இத்தருமத் தொண்டைச் செய்வதற்கு நிரந்தர அன்னதான மண்டபம் ஒன்றினை அமைப்பதற்கு சபையினர் எடுத்துக்கொண்ட பெருமுயற்சியால் அதற்கான காணியும் பெறப்பட்டு நிரந்தர அன்னதான மண்டபமும் அமைக்கப்பட்டு அன்னதானப் பணி தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

இவ் அன்னதான சபையினர் அடியார்களை இன்முகத்துடன் வரவேற்று, அவர்களுக்கு அமுதூட்டி, பசி தீர்த்து இன்முகத்துடன் அனுப்பி வைக்கின்ற தெய்வீகக் காட்சியைக் கண்டு பலர் பாராட்டியுள்ளனர். இந்தியாவில் இருந்தும் கூடப் பல அறிஞர்கள் நேரில் வந்தும் பாராட்டியுள்ளார்கள். தமிழக அறிஞர், கலைமகள் பத்திரிகை ஆசிரியர் உயர்திரு.கி.வா.ஜெகநாதன் 1968ஆம் ஆண்டில் நயினையம்பதிக்கு வந்தசமயம் அன்னதானச் சபையின் சேவையைப் பாராட்டி "அமுதசுரபி" என்னும் நாமத்தை அன்னதான சபை மண்டபத்துக்குச் சூட்டிவைத்தார். அன்றிலிருந்து இச்சபை "நயினாதீவு ஸ்ரீநாகபூஷணி அமுதசுரபி அன்னதான சபை" என வழங்கப்பட்டு வருகின்றது. மணிபல்லவத் தீவுக்கு (நயினாதீவு) மணிமேகலையுடனும், ஆபுத்திரனுடனும், அட்சய பாத்திரத்துடனும் தொடர்புகள் உள்ளதாக வரலாறு கூறுகிறது. மணிமேகலையில் கூறப்படும் மணிபல்லவமும், நயினாதீவும் ஒன்றே என்பது வரலாற்று ஆய்வாளர்களது கருத்தாகும்.

*"மணித்தீப மெனும் நயினை தீவு நனி*
*வாழியதில் மகிழ்ந்து கோயில்*
*பிணிப்பிறவி யறுப்பதற்காகக் கொண்டுயரும்*
*அரவணிந்த பெரியாள் வாழி*
*கணித்திதுவே பேரறமென் றன்னதானம்*
*செய்யும் கருத்தோர் வாழி*
*அணித் தெனவே யார்க்குமனம் தரும் அமுத*
*சுரபியில்லம் அலர்ந்து வாழி"*

அள்ள அள்ளக் குறையாத "அமுத சுரபி" என்னும் தெய்வீகப் பாத்திரம் பொலிவுற்றதுபோல் அன்னதானமும் பொலிவுற்றுக்கொண்டே செல்கின்றது என்பது அடியார்களின் நம்பிக்கையாகும். அத்தகு சிறப்புமிக்க "அமுதசுரபி" அன்னதான சபை கடந்த ஐம்பது ஆண்டுகளாக அருந்தொண்டாற்றி வருகிறது. இப்பெரும் பணிக்கு அன்புள்ளங்கொண்ட தர்மசீலர்கள், தனவந்தர்கள், அம்பிகை அடியார்கள் மற்றும் எனப் பலர் நிதியுதவி, பொருளுதவி செய்து வருகின்றனர்.

இன்று பொன்விழாக் கொண்டாடும் அமுதசுரபி அன்னதான சபையின் வளர்ச்சிக்கும், உயர்ச்சிக்கும் பாடுபட்ட, பாடுபட்டுவரும் சபை உறுப்பினர்கள் பாராட்டப்பட வேண்டியவர்கள். இத்திருத்தொண்டு மேலும் வளர்ச்சியுற்று அம்பிகையின் நல்லருள் மேலோங்க வேண்டும். அம்பிகை அன்னபூரணியாக நின்று அமுதசுரபியில் அமுது சுரக்க வேண்டும். "அமுதசுரபி" அன்னதான சபையினரின் அருந்தொண்டு உலகம் உள்ளளவும் நிறைவுடன் நிகழ்ந்திட அம்பிகையைப் பிரார்த்திப்போமாக.

## நயினை வாழ் சுந்தரி நீ சொல்வாய் தாயே!

நாளொரு சேலை கட்டி
நவயுக நகைகள் மாட்டி
கோலமும் குறியும் மாறி
குணநடை வேறுபட்டு
ஆலயம் வந்து போகும்
ஆரணங்கே! ஒன்று கேட்பேன்
சேலையோ ஒன்றை வைத்து
சிறுபொத்தல் பலவும் பொத்தி
ஓலைக்குடிசையிலே ஒதுங்கியே நின்றுகொண்டு
உடல் பொத்தி வாழுவோரை
காலன்கை சிக்க முன்பே
காப்பதுன் கடமையன்றோ?
சோலை சூழ் நயினை வாழும்
சுந்தரிநீ சொல்வாய் தாயே.

*விகடகவி.*

# 'வடக்கின் வசந்தம்' திட்டங்களுக்கு உதவ கால் பதிக்கிறது 'தேசிய' வங்கியான சம்பத்



நீல் போககலந்த

ஆகப்பிந்திய தொழில்நுட்ப வசதிகளுடனும் விவசாயம், கடற்றொழில், சிறுதொழில் வளர்ச்சிக்கான கவர்ச்சியான கடன் வசதிகளுடனும் வடக்கில் கால்பதிக்கவிருக்கின்றது சம்பத் வங்கி.

அந்த வங்கியின் மனிதவள அபிவிருத்தி உதவிப் பொதுமுகாமையாளர் நீல் போககலந்த இப்படிக் கூறியுள்ளார்.

வடக்குக்கு வங்கியின் பணிகளை விஸ்தரிப்பது தொடர்பாக ஆராய்வதற்காக யாழ்ப்பாணம் வந்திருந்த அவர் 'உதயன்' அலுவலகத்துக்கு விஜயம் மேற்கொண்டு தமது வங்கியின் செயற்பாடுகளை விளக்கிக் கூறினார்.

அவர் அளித்த செவ்வி வருமாறு:

**கே:** தங்கள் வங்கியின் செயற்பாடுகள் குறித்து விளக்கமுடியுமா?

**ப:** 20 வருட பழைமை வாய்ந்த எமது வங்கி நாடு முழுவதும் 116 கிளைகளை ஸ்தாபித்துச் செயற்படுகிறது. அத்துடன் பணப்பரிமாற்றத்துக்காக 175 ஏரிஎம் வசதிகளையும் செய்துள்ளோம்.

தேசிய வங்கியான சம்பத் வங்கி இப்போது வடக்கிலும் கால்பதிக்கவிருக்கிறது. கிழக்கு மீட்கப்பட்ட பின் கிழக்கில் எமது கிளைகளை ஆரம்பித்து, கிழக்கின் வசந்தம் திட்டத்துக்கு உதவி வருகின்றோம்.

அந்தவகையில் இன்று வடக்கில் யுத்தம் முடிவுக்கு வந்துள்ளது. இங்கும் வடக்கின் வசந்தம் திட்டம் மூலம் சமாதானத்தையும் அபிவிருத்தியையும் கட்டி எழுப்ப எமது வங்கியின் சேவையை விஸ்தரிக்க முடிவு செய்துள்ளோம்.

போர் முடிவடைந்த பின்னர் வடக்கில் சகல துறையினரும் தமது செயற்பாடுகளை ஆரம்பித்து வருகின்றனர். தேசிய வங்கி என்ற வகையில் சம்பத் வங்கியும் தனது செயற்பாடுகளை வடக்கில் ஆரம்பிக்கப் போகின்றது.

யுத்தம் முடிவடைந்த பிரதேசத்தில் முன்னெடுக்கப்படவுள்ள வர்த்தக மற்றும் அபிவிருத்திப் பணிகளுக்கு நாமும் கைகொடுக்கவிருக்கிறோம்.

தேசிய சிந்தனை கட்டி எழுப்பப்படும் போது தேசிய வங்கி என்ற ரீதியில் பங்களிப்புச் செய்யவேண்டியது எமது கடமையாகும்.

**கே:** இலங்கை வங்கி, மக்கள் வங்கி போன்று தேசிய வங்கியாக சம்பத் வங்கி செயற்படுகின்றதா?

**ப:** உண்மையில் கூறப்போனால் சம்பத் வங்கி முற்றுமுழுதாகத் தனியாரின் வங்கியாகும். தேசிய வங்கி என்று கூறுவதன் நோக்கம் என்னவென்றால், நாட்டின் சகல பகுதிகளிலும் சகல இன, மத, மொழி மக்களையும் உள்வாங்கிச் செயற்படும் வங்கி என்பதாகும். தனியார் வங்கி என்ற [illegible]யறைக்குள் செயற்பாடுகளை மு[illegible]மல் சகலருக்கும் சொந்தமான வங்கியாகச் [illegible] தேசிய வங்கி என்[illegible].

**கே:** வடக்கில் வங்கி மேற்கொள்ளும் விஸ்தரிப்புக் குறித்து...?

**ப:** குடாநாட்டில் யாழ்.நகரம், சுன்னாகம், சாவகச்சேரி, நெல்லியடி என நான்கு கிளைகளை முழு வசதிகளுடனும் அமைக்கவிருக்கிறோம். யாழ்.நகரக் கிளை இம்மாத இறுதியில் இயங்க ஆரம்பிக்கும். ஏனைய கிளைகள் படிப்படியாகச் செயற்படும். வன்னியில் மீள்குடியமர்வு இடம்பெற்ற பின்னர் அங்கும் கிளைகள் அமைக்கத் திட்டமிட்டுள்ளோம்.

**கே:** தங்கள் வங்கிமூலம் மக்களுக்கு வழங்க உத்தேசித்துள்ள சேவைகள் என்ன?

**ப:** வழமையான பணப்பரிமாற்றம், 29 முகவர்கள் ஊடான சர்வதேச பணப்பரிமாற்றம், விவசாயம், கடற்றொழில், சிறுகைத்தொழில் ஆகியவற்றுக்குக் கடன் திட்டங்கள், அடகு நகைச் சேவை, நகைகளைப் பாதுகாக்க பெட்டக வசதி என்பவை எமது பிரதான செயற்பாடுகளாக இருக்கும்.

**கே:** யுத்தம் முடிவடைந்த பின்னர் ஆரம்பிக்கப்படும் தங்கள் வங்கி மூலம் கவர்ச்சியான திட்டங்கள் ஏதும் நடைமுறைப்படுத்தப்படுமா?

**ப:** வடக்கின் பிரத்தியேக திட்டம் என்று குறைந்த வட்டியுடன், இலகுவான வழிமுறைகள் ஊடாக கடன்திட்டங்களை அறிமுகப்படுத்தவிருக்கின்றோம்.

வடக்கின் பிரதான செயற்பாடாகவுள்ள விவசாயம், கடற்றொழிலுக்கு முன்னுரிமை அடிப்படையில் கடன் வசதிகளை வழங்கத் திட்டமிட்டுள்ளோம். ஏனைய வங்கிகளை விட குறைந்த வட்டியை அறவிடும் வங்கி என்று பெயர் வாங்கிய சம்பத் வங்கி, அதே பெயரை வடக்கிலும் வாங்கும் என நம்புகிறோம்.

**கே:** தங்கள் வங்கிச் செயற்பாடுகளில் [illegible]த்தில் நேர்முகப் [illegible]யுள்ளமை குறித்து...?

**ப:** எமது வங்கி எந்தப் பிரதேசத்தில் தமது செயற்பாடுகளை ஆரம்பித்தாலும் அந்தப் பிரதேசத்தில் இருந்தே பணியாளர்களைத் தெரிவுசெய்வது வழமையாகும். வங்கியின் பயன்பாடு அந்தப் பிரதேச மக்களுக்கு முழுமையாகக் கிடைக்க, அந்தப் பிரதேச இளைஞர், யுவதிகளுக்கே வேலைவாய்ப்புகளை வழங்கவேண்டும். அப்போதுதான் அந்த வங்கியும் மக்களுடன் பின்னிப் பிணைந்து செயற்படமுடியும்.

கொழும்பிலிருந்து 50 பேரைக் கொண்டு சென்று வங்கிக் கிளைகளை இயக்கமுடியும். ஆனால் நாங்கள் அப்படிச் செய்வதில்லை. வங்கி அமையும் பிரதேச மக்களில் இருந்தே ஆளணியையும் தெரிவுசெய்கிறோம்.

அந்தவகையில், வடக்கில் அமையவிருக்கும் கிளைகளுக்கும் இங்கிருந்தே ஆள்களைத் தெரிவுசெய்ய முடிவுசெய்தோம். இதற்காக விண்ணப்பங்களைக் கோரினோம். 2ஆயிரம் பேர் குறிப்பிட்ட கால எல்லைக்குள் விண்ணப்பித்தனர். கால எல்லையைத் தாண்டி வந்த ஆயிரத்துக்கும் மேற்பட்ட விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டுவிட்டன.

இந்த விண்ணப்பங்களில் இருந்து அறுநூறு பேர் தெரிவுசெய்யப்பட்டனர். அவர்களுக்குப் பல்வேறு வகையான பரீட்சைகள் நடத்தப்பட்டன. அவர்களில் இருந்து 50 பேரே தெரிவுசெய்யப்படவிருக்கின்றனர்.

தேசிய நிறுவனம் ஒன்றின் நேர்முகப் பரீட்சைக்கு எவ்வாறு தோற்றவேண்டும். எந்தவகையில் முகம் கொடுக்கவேண்டும் என்பதற்குப் பயிற்சி அளிக்கும் வகையில் இந்த நேர்முகப் பரீட்சையின் செயற்பாடுகள் அமைந்திருந்தன.

இந்தப் பரீட்சையில் கிடை[illegible] அனுபவம் எதிர்கால நேர்முக[illegible] பரீட்சைகளில் தோற்ற வசதி[illegible] இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தமிழர் விடுதலைக் கூட்டணியின் யாழ்.மாநகரசபைத் தேர்தலுக்கான கொள்கை விளக்கக் கூட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியில் அமைந்துள்ள தமிழர் விடுதலைக் கூட்டணி அலுவலகத்தில் சங்கையா தலைமையில் நடைபெற்றது.
இந்த நிகழ்வில் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் (பத்மநாபா அணி) ரி.சிறீதரன் உரையாற்றுவதையும் யாழ்.மாநகரசபை முதன்மை வேட்பாளரும் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவருமான வீ.ஆனந்தசங்கரி உரையாற்றுவதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம். (படங்கள்: நேசன்)

# வலிகாமம் கல்வி வலயம் நடத்திய ஆங்கில தினப் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம்,ஜூலை1

வலிகாமம் கல்வி வலய ஆங்கில தினப் போட்டி முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

3முதல் 11 வரையான தரங்களுக்கு நடத்தப்பட்ட பாவோதல் போட்டிகளில் முதல் மூன்று இடங்களையும் பெற்றுக் கொண்டோர் விவரம் முறையே வருமாறு:

*தரம் 3* - கி.சாந்துஜா (உடுவில் மகளிர் கல்லூரி), தி.ஆதர்சினி (உடுவில் மகளிர் கல்லூரி), கே.குந்தவை (மகாஜனக் கல்லூரி).

*தரம் 4* - சி.சௌமிகா (வட்டுக் கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி), யோ. அமலதாஸ் (உடுவில் மகளிர் கல்லூரி), ப.சாரங்கி (யாழ்ப்பாணக் கல்லூரி).

*தரம் 5* - பெ.அமன்டா நிஸ்றின் (யாழ்ப்பாணக் கல்லூரி), யோ.நிவேதன் (யாழ்ப்பாணக் கல்லூரி), ச.தினுஜா (சித் தங்கேணி ஸ்ரீ கணேச வித்தி.).

*தரம் 6* - ந.துசாயினி (இளவாலை கன்னியர்மடம் ம.வி.), இ.இலக்கியா (யாழ்ப்பாணக் கல்லூரி), வி.பவித்திரா (மானிப்பாய் சென்.ஆன்ஸ் றோ.க.).

*தரம் 7* - சி.சிவானந்தி (சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி), ம.தரண்யா (மகாஜனக் கல்லூரி), வி.விதுர்சன் (ஸ்கந்தவரோதயாக் கல்லூரி).

*தரம் 8* - சொ.ஆஷா டெவினியா (யாழ்ப்பாணக் கல்லூரி), சா.தேனுஜா (இளவாலை கன்னியர்மடம் ம.வி.), சி.ஆரமுதன் (ஸ்கந்தவரோதயக் கல்லூரி).

*தரம் 9* - ந.நிக்சலா (உடுவில் மகளிர் கல்லூரி), சி.அஞ்சலின் (உடுவில் மகளிர் கல்லூரி), இ.காயத்திரி (யாழ்ப்பாணக் கல்லூரி).

*தரம் 10* - சி.பிரதக்சனா (உடுவில் மகளிர் கல்லூரி), ந.கிருசிகா (இளவாலை கன்னியர்மடம் ம.வி.), ந.சரண்யா (யாழ்ப்பாணக் கல்லூரி).

*தரம் 11* - தே.டிலக்ஷி (உடுவில் மகளிர் கல்லூரி), சி.சாம்பவி (உடுவில் மகளிர் கல்லூரி), கு.பகீரதி (மானிப்பாய் மகளிர் கல்லூரி), ர.பென்டில்கரன் (யாழ்ப்பாணக் கல்லூரி).

உயர்தர வகுப்பு மாணவர்களுக்கான பேச்சுப் போட்டியில் முதல் மூன்று இடங்களையும் பெற்றோர் விவரம் முறையே வருமாறு:

*தரம் 12* - ம.துளசி (யாழ்ப்பாணக் கல்லூரி), ஸ்ரீ.கௌசிகா (விக்ரோறியாக் கல்லூரி), ம.ஜசின் மெலானி (கன்னியர் மடம் ம.வி.).

*தரம் 13* - எம்.தரணிகா (இராமநாதன் கல்லூரி), தி.பத்மநாதன் (யாழ்ப்பாணக் கல்லூரி), கி.கஜேந்தினி (யூனியன் கல்லூரி).

உடனடி பேச்சுப் போட்டியில் வெற்றி பெற்றோர் விவரம் வருமாறு:

*தரம் 12* - ஜே.றோசனா (உடுவில் மகளிர் கல்லூரி), ந.பானுஜா (உடுவில் மகளிர் கல்லூரி), சி.வத்சனி (யாழ்ப்பாணக் கல்லூரி).

*தரம் 13* - இ. விதுஜா (உடுவில் மகளிர் கல்லூரி), சி.சிவாஞ்சலி (உடுவில் மகளிர் கல்லூரி), நா.சுலக்சிகா (இளவாலை கன்னியர் மடம்ம.வி.) (50-38)

## தென்மராட்சியில் மூவருக்கு தற்செயல் நிவாரணம்

யாழ்ப்பாணம், ஜூலை 2

தென்மராட்சி பிரதேசத்தைச் சேர்ந்த மூவருக்கு சமூக சேவைகள் திணைக்களத்தினால் தற்செயல் நிவாரணக் கொடுப்பனவுகள் பிரதேச செயலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

மீசாலையைச் சேர்ந்த ஸ்ரீ.இராஜேஸ்வரி, க.கமலாம்பிகை, மிருசுவிலைச் சேர்ந்த சி. ரேணுகா ஆகிய மூவருக்கும் தலா 10 ஆயிரம் ரூபா வீதம் வழங்கப்படவுள்ளன.

குறிப்பிட்ட பயனாளிகள் தமது தேசிய அடையாள அட்டை, குடும்ப அட்டை ஆகியவற்றுடன் எதிர்வரும் 6ஆம் திகதி திங்கட்கிழமை பிரதேச செயலக சமூக சேவைகள் பிரிவுக்கு வருகை தருமாறு பிரதேச செயலர் செ.ஸ்ரீனிவாசன் அறிவித்துள்ளார். (203-2[illegible])

SALE

DOCTOR USED MOTOR BIKE, T.V.S VICTOR GLX 125 VTI - BLACK, NPJY XXXX. NO BROKERS (All The Documents Available)

Contact : 077 8998356

# படகு மூலம் அவுஸ்திரேலியா செல்லும் இலங்கையர்கள் எண்ணிக்கை அதிகரிப்பு

## அந்நாட்டு அதிகாரிகள் தகவல்

மெல்போர்ண், ஜூலை 2

அவுஸ்திரேலியாவிற்கு படகுகள் மூலம் சட்டவிரோதமாகச் செல்லும் இலங்கையர்களின் எண்ணிக்கை கடந்த வாரத்தில் திடீரென அதிகரித்துள்ளது.

சட்டவிரோதமாக படகுகள் மூலம் வருபவர்களில் முன்னாள் விடுதலைப் புலி உறுப்பினர்களும் இருக்கலாம் என்ற அச்சம் காரணமாக, அங்குவரும் தமிழர்கள் கடுமையான பாதுகாப்புச் சோதனை நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்படுகின்றனர் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இலங்கை அரசு பழிவாங்கும் நடவடிக்கையில் ஈடுபடலாம் என்ற அச்சம் காரணமாக முன்னாள் விடுதலைப்புலி உறுப்பினர்கள் படகுகள் மூலம் - சட்டவிரோ தமாக - வரலாம் என அவுஸ்திரேலியா கருதுகின்றது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை கிறிஸ்மஸ் தீவுக்கு வந்து சேர்ந்த 194 சட்டவிரோத குடியேற்றவாசிகளில் பெரும்பாலானவர்கள் தமிழர்கள் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இலங்கையில் காணப்படும் பாதுகாப்பு அச்சுறுத்தல் குறித்து கருத்தில் கொண்டுள்ளோம் என அவுஸ்திரேலியாவின் மூத்த அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இந்த விடயம் அனைவரது மனதிலும் முக்கியமாக உள்ளது என்றும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

கடந்த சில மாதங்களில் 300 இலங்கையர்கள் சட்டவிரோதமாக அவுஸ்திரேலியாவிற்குச் சென்றுள்ளனர். இவர்களில் பெரும்பாலோனோர் தமிழர்கள். எனினும், எவரும் இன்னமும் அகதி அந்தஸ்துக்கான தகுதியைப் பெறவில்லை என தகவல்கள் வெளியாகியுள்ளன. (அ-சி)

# மரண அறிவித்தல்

## திருமதி தங்கமுத்து சின்னத்துரை



பாலாவி தெற்கு, கொடிகாமத்தை நிரந்தர வசிப்பிடமாகவும் பெரியமாவடி, சாவகச்சேரியை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட திருமதி தங்கமுத்து சின்னத்துரை (28.06.2009) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் தம்பையா சின்னத்துரையின் அன்பு மனைவியும் துரைசிங்கம் , தனபாலசிங்கம் (சின்னண்ணா), இரத்தினசிங்கம் (குஞ்சுகிளி), சுசீலாதேவி(ஆசிரியை, யா/கச்சாய் அ.த.க பாடசாலை), செந்தி, குணம், வசந்தன், ரகு ஆகியோரின் பாசமிகு தாயாரும், வசந்தலீலா , புவி, மலர், நாதன், சாந்தி, பாமா, ரஜி, பிரதீபா ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.07.2009) வியாழக்கிழமை பி.ப. ஒரு மணியளவில் அவரின் தற்காலிக இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பாலாவி இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பேரப்பிள்ளைகள்:
தனபாலசிங்கம் அஜீதா
ஜெகநாதன் சுஜித்தா
(யாழ்.பல்கலைக்கழக கலைப்பீட இரண்டாம் வருட மாணவிகள்)

பெரியமாவடி,
சாவகச்சேரி. (சி/559296)

# நெஞ்சை விட்டு அகலா 45ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 07 * 10 * 1998



உதிர்வு 19 * 05 * 2009

## செல்வி பரமேஸ்வரன் அஸ்வினி

இன்றுடன் பிரிந்து நாள்கள் நாற்பத்தைந்தாகுது ஆனால்
என்றுமே எங்கள் நெஞ்சம் உம்மைத்தான் நினைக்கும் நாளும்
கன்றினைப் பிரிந்த ஆவாய் கவலையில் வாழும் நாங்கள்
என்றுதான் உம்மைக் காண்போம் அஸ்வினி விடைசொல்வாயே

அன்னாரின் 45ஆம் நாள் நினைவு தினத்தை முன்னிட்டு இன்று (02.07.2009) வியாழக்கிழமை எமதில்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனை நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய [illegible]சனத்திலும் பங்கேற்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனை[illegible] கேட்டுக் கொள்கின்றோம்.

[illegible]ா.பரமேஸ்வரன் (தகப்பன்),
[illegible], கோப்பாய் மத்தி.
குடும்பத்தினர்.

## ஏ-9 பாதையூடாக பழவகைகள் வந்தன

யாழ்ப்பாணம், ஜூலை 2

நீண்ட காலத்துக்குப் பின்னர் கொழும்பில் இருந்து ஏ-9 தரைப் பாதையூடாக மங்குஸ்தான், றம்புட்டான் போன்ற பழவகைகள் எடுத்து வரப்பட்டுள்ளன.

றம்புட்டான் ஒன்று பத்து ரூபாவாகவும், மங்குஸ்தான் ஒன்று 25 ரூபாவாகவும் விற்பனை செய்யப்படுகின்றன. (203-224)

Contemporary Business Management
Duration :- 6 Months

முகாமைத்துவத்துறையில் உங்கள் திறனை வளர்த்துக் கொள்ளுங்கள்.

இக்கற்கை நெறியானது முகாமைத்துவத் துறையில் பணிபுரிவோர் மற்றும் இத்துறையில் ஆர்வமுள்ள மாணவர்களுக்கு நவீன முகாமைத்துவத்தின் எண்ணக்கருக்களையும், சமகால தகவல் தொழில்நுட்ப, தொழில்நுட்ப பிரயோகங்களையும் பயன்படுத்த தக்க வகையில் வடிவமைக்கப்பட்டதாகும். இக்கற்கை நெறி இத்துறையில் நீங்கள் உயர்கல்வியை தொடரவும், வங்கிகள், அரச, தனியார் நிறுவனங்களில் இலகுவாக வேலைவாய்ப்பை பெற்றுக்கொள்ளவும் ஓர் சிறந்த வாய்ப்பினை ஏற்படுத்தி தருகின்றது.

Course Contents
1. Management &Organizational Behaviour
2. Human Resource Management
3. Marketing Management
4. Financial Management
5. Business Communication
6. ICT For Managers

New Batch Starts on 05-07-2009



IIS CITY CAMPUS
#200, Sivan Pannai Road, Jaffna.
Tel:021 222 8080 Fax:021 222 6933
Email:iiscc@sltnet.lk Web: www.iiscitycampus.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 25 வருட பூர்த்தியில் வெள்ளிவிழாக் காணும் யாழ்.பல்கலைக்கழக சித்தமருத்துவப் பிரிவு

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் சித்தமருத்துவப் பிரிவு ஆரம்பிக்கப்பட்டு இன்று 25 வருடங்கள் (1984-2009) பூர்த்தியாகின்றன. 02.07.1984இல் சித்தமருத்துவத்துறை யாழ்ப்பாணத்திற்கு மாற்றப்படுவதற்கு முன்னரே பல பரம்பரை மருத்துவர்களும் அவர்களுக்காக அமைக்கப்பட்ட லங்கா சித்த ஆயுள் வேதக் கல்லூரியும் தமிழ் மருத்துவத்தைப் பாதுகாத்தும் பேணியும் வந்துள்ளனர். ஆரம்பத்தில் சேர்.கே.பாலசிங்கம் அவர்களின் முயற்சியினால் ஸ்தாபிக்கப்பட்ட சுதேச மருத்துவக் கல்லூரியிலும், பின்னர் 1961இல் பெயர்மாற்றம் செய்யப்பட்ட அரசினர் ஆயுள்வேதக் கல்லூரியிலும் 1977இல் கொழும்புப் பல்கலைக்கழகத்தில் இணைக்கப்பட்ட சுதேச மருத்து நிறுவனத்திலும் ஆயுள்வேதம், யுனானி ஆகிய மருத்துவப் பிரிவுகளுடன் சித்த மருத்துவப் பிரிவும் சேர்ந்தே இயங்கி வந்துள்ளது.

## அதன்நோக்கங்களும் வளர்ச்சிக்கான ஆலோசனைகளும்

1984ஆம் ஆண்டு யூலை மாதம் 2ஆம் திகதி யாழ்.பல்கலைக்கழகத்திற்கு மாற்றப்பட்ட சித்த மருத்துவப் பிரிவு 5 வருட கற்கை நெறியினைக் கொண்டது. இக்கற்கை நெறியினைப் பூர்த்தி செய்து இறுதிப் பரீட்சையில் சித்தியெய்தும் மாணவருக்கு சித்த மருத்துவமாணி, சத்திர சிகிச்சைமாணி (Bachelor of Siddha, Medicine & Surgery) பட்டம் வழங்கப்படுகின்றது. அதன்பின்னர் ஒரு வருட ஆரோக்கிய சாலைப் பயிற்சியை நிறைவு செய்ததும் ஆயுள்வேத வைத்தியசாலையில் வைத்தியராகப் பதிவு செய்யப்படுவர். இற்றை வரை 19 அணி மாணவர்கள் பி.எஸ்.எம்.எஸ் பட்டம் பெற்றுள்ளனர். அவர்களில் 18ஆவது 19ஆவது அணி மாணவர்களைத் தவிர ஏனைய 200க்கும் மேற்பட்ட பட்டதாரிகள் பல்கலைக்கழக விரிவுரையாளர்களாகவும் மாகாணப் பணிப்பாளராகவும் வைத்தியப் பொறுப்பு அதிகாரியாகவும், வைத்திய உத்தியோகத்தராகவும் பொது சுகாதார வைத்திய உத்தியோகத்தராகவும் கடமை புரிகின்றனர்.

சித்த மருத்துவப் பிரிவின் முக்கிய நோக்கங்களாவன,

அ.மக்களின் சுகாதார தேவைகளை இனம்கண்டு ஆரோக்கியத்தைப் பேணுதல், நோய் அணுகாமல் பாதுகாத்தல் மற்றும் நோய் நிலைகளை இனம் கண்டு சிகிச்சித்தலாகும்.

மக்களின்உணவுப்பழக்கங்கள், வாழ்க்கை முறை, தரமான சித்த மருந்துகள் தயாரிக்கப்பட்டு சிகிச்சை புரிதல் ஆகிய விடயங்களில் சித்த மருத்துவம் மக்களின் சுகாதார தேவைகளைப் பூர்த்தி செய்தால் மக்கள் மத்தியில் ஒரு முக்கிய இடத்தைப் பெறும். 25 வருடங்கள் கடந்த நிலையில் பல்கலைக்கழகத்தினதும் கைதடி சித்த போதனா வைத்தியசாலை, மாகாண சுதேச மருத்துவத் திணைக்களம் அதன் கீழ் செயற்படும் ஆரோக்கியசாலை, மத்திய மருந்தகம், உள்ளூராட்சி சபைகளின் கீழ் செயற்படும் இலவச சித்த ஆயுள்வேத வைத்தியசாலைகள் ஆகியவற்றினதும் சேவைகள் எவ்வாறு அமைந்திருந்தால் சித்த மருத்துவம் அபிவிருத்தியடைய வழிவகுக்கும் என்பது இன்றைய காலத்தின் தேவையாகும்.

பல்கலைக்கழகத்தில் சித்தமருத்துவத் துறை சித்தமருத்துவம் நன்கு செயற்படுவதற்கும் மாணவர்களுக்கான கல்விச் சேவைகள் அடிப்படை வசதிகளுடன் திருப்திகரமாக வழங்கப்படுவதற்குத் தடையாக உள்ள காரணிகள் இனம் காணப்பட்டு அவை சீராக்கப்படல் வேண்டும்.

அ. கட்டட வசதிகள்
ஆ. ஆய்வுகூட வச திகள்
இ. செய்முறைப் பயிற்சிகள்
ஈ. நூலக வச திகள்

வைத்திய உத்தியோகத்தர், விரிவுரை யாளர்கள் போன்றவர்களின் பட்டப்பின் படிப்பு சம்பந்தமான ஒரு அலகு உருவாக்கப்பட வேண்டும். இந்த அலகு சுயாதீனமாக இயங்குவதற்கான ஆவணங்கள், பாடத் திட்டம் வகுக்கப்பட வேண்டும். அடிப்படை வசதிகள் குறைவற்றதாக வழகங்கப் பட வேண்டும்.

### சித்த போதனா வைத்தியசாலை

சித்த போதனா வைத்தியசாலை பின்வரும் அடிப் படை நோக்கங்களைக் கொண்ட தாகும்.

மக்களுக்கு தரமான விசேட சிகிச்சைகளை வழங்கும் உன்னத நிலை யமாக இருத்தல், ஆயுள்வேத ஆணையாளருடன் அனுசரணையுடன் போதனா வைத்தியசாலையின் அடிப்படைத் தேவைகளை அமைத்தல். மாணவர்களின் கல்வித் தேவைகளுக்கான அடிப்படை வசதிகள் கொண்ட பிரிவுகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

வைத்திய உதியோகத்தர்கள், விரிவுரையாளர்கள் மேற்கொள்ளும் ஆராய்ச்சிகளுக்கான அடிப்படை வசதிகள், ஆய்வுகூட வசதிகள் கொண்டதாக அமைந்திருத்தல் வேண்டும்.

தரமான சித்த மருந்துகள் தயாரிப்பதுடன் மணவர்களுக்கு பயிற்சியையும் வழங்குவதற்கான வசதிகள் அமையப்பெற்றதாக இருத்தல் வேண்டும்.

விஷேட சிகிச்சைகள் வழங்கும் நிலையமாக அமைதல் வேண்டும்.

### மாகாண சுதேச மருத்துவத் திணைக்களம்

பல்வேறுபட்ட அமைப்புக்களின் கீழ் செயற்படும் வைத்தியசாலைகளை ஒருங்கிணைத்து பொதுவான நிர்வாக அமைப்பை ஏற்படுத்துதல் மாகாண சுதேச மருத்துவத் திணைக்களத்தின் முக்கிய செயற்பாடாக அமையவேண்டும்.

வைத்தியசாலைகளுக்கிடையேயான தொடர்புகள் நல்ல முறையில் பேணப்பட வேண்டும்.

தங்கியிருந்து சிகிச்சை பெறும் வசதிகள் கொண்ட கிராமிய வைத்தியசாலைகள், மாவட்ட வைத்தியசாலைகள் அமைக்கப்படுதல்வேண்டும்.

சித்த மருந்துகள் தயாரிக்கும் ஔடத பாடசாலை அமைக்கப்படுதல் உடனடி தேவையாகும். தரமான மருந்துகள் தயாரிப்பதற்குத் தரநிர்ணய கட்டுப்பாட்டுச் சபை அமைக்கப்பட வேண்டும்.

மருந்துகள் தயாரிப்பதற்கு தேவையான குறிப்பிட்ட மூலிகைகள் பயிரிடப் படவேண்டும்.

போதனா வைத்தியசாக்கு மாகாண சபையின் கீழ் செயற்படும் வைத்திய சாலையிலிருந்து விஷேட சிகிச்சைக்காக நோயாளிகளை அனுப்பும் நடைமுறை பின்பற்றப்படவேண்டும்.

வருடாந்தம் சிகிச்சை பெற்ற பல்வேறு தரப்பட்ட நோயாளர்களின் எண்ணிக்கையும், சிகிச்சையினால் குணமடைந்த நோயாளர்கள், குணமடையாதவர்கள், மரணித்தவர்கள் பற்றிய விவரங்கள் ஒரு வருடாந்த சஞ்சிகை மூலம் வெளியிடப்பட வேண்டும்.

சுகாதாரப் பிரச்சனைகள் யாவை என்பதை மக்களிடம் கேட்டறிந்து அவற்றை நிவிர்த்திப்பதற்கான திட்டங்களை ஆராய்தலும் வகுத்தலும்.

பரம்பரை வைத்தியர்களின் விஷேட சிகிச்சை முறைகளை ஊக்குவிக்கத் திட்டம் வகுத்தல்

வைத்தியர்களுக்கான பயிற்சி களை சேவை மூப்பு அடிப்படையில் இந்தியாவில் வழங்க சம்பந்தப்பட்ட நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டு திட்டங்களை வகுத்தல்.

தாதியர், மருந்தாளர், பரிசாரகர் போன்றவர்களுக்கான திட்டமிட்ட பயிற்சிநெறிகளை ஆரம்பித்தல்

மாகாணத்திலுள்ள மூலிகைப் பரம்பலை இனம் கண்டு அவற்றை அழியவிடாது பாதுகாத்தல். தகுந்த காலங்களில் சேகரிப்பு நிலையங்கள் மூலம் அவற்றை சேகரித்து பதப்படுத்தி பாதுகாத்து மருந்து உற்பத்தியில் சேர்த்தல்.

ஏனைய மருத்துவ முறையைச் சார்ந்தவர்கள் விவசாய திணைக்கள உத்தியோகத்தர் - வன பரிபாலன உத்தியாகத்தர் - காணி சம்பந்தமன அமைச்சின் உத்தியோகத்தர்- கால்நடைவளர்ப்பு உத்தியோகத்தர் ஆகியவர்களுடன் கலந்துரையாடி சித்த மருத்துவத்துறையை அபிவிருத்தி செய்யும் வழிவகைகளை ஆராய்தல்.

அரசாங்கத்திடமிருந்து போதிய நிதியைப் பெறும் திட்டவரைபுகளை சமர்ப்பித்தல், மற்றும் அரசசார்பற்ற நிறுவனம் தனியார் நிறுவனங்களுடனும் கலந்தாலோசித்து நிதியைப் பெறுதல்

மேற்கூறிய விடயங்களை சித்தமருத்துவம் சார்ந்த அரும்பெரும் நூல்கள் ஏடுகள் போன்றவற்றை மீள் பதிப்பு செய்தல் அதில் ஆய்வுகள் மேற்கொள்ளல்.

உலக சுகாதார ஸ்தாபனத்தின் அனுசரணையுடன் சிறிய அளவில் ஆய்வுகளை ஆரம்பித்து மூலிகை சம்பந்தப்பட்டவர்கள் உணர்ந்து ஒருங்குசேர்த்து திட்டமிட்டு படிப்படியாக நிறைவேற்றி னால் சித்தமருந்துவம் இன்னும் ஒரு தசாப்தத்தில் சுகாதார சேவையில் ஒரு உன்னத நிலையை உருவாக்கும்.

பேராசிரியர் சுப்பிரமணியம் பவானி
(சித்தமருத்துவப் பிரிவு)

---


## நன்றியும் பாராட்டும்



டக்ளஸ் தேவானந்தா
சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர்

யாழ்.மாவட்டத்தில் உள்ள கடற்றொழிலாளர்கள் 24 மணி நேரமும் தொழிலில் ஈடுபடுவதற்கு அரசு அனுமதி வழங்கியும் மாதகலில் உள்ள தொழிலாளர்களுக்கு அனுமதி கிடைக்கவில்லை. இதனை நாம் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத் துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கவனத்துக்கு கொண்டு சென்றோம். அவர் உடனடியாக கடற்படையினருடன் தொடர்புகொண்டு எம்மை 24 மணி நேரமும் தொழில்செய்வதற்கும் நீண்டகாலம் தடைசெய்யப்பட்ட மாதகல் துறைமுகத்தில் படகுகள் கட்டுவதற்கும் அங்கு கரையிலே மீனை சந்தைப்படுத்துவதற்கும் ஏற்றவகையில் உத்தரவு பெற்றுத்தந்ததற்கு மாதகல் தொழிலாளர்கள் சார்பில் நன்றியையும் அவருக்கு எமது பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

மாதகல் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம்
(86669)


## பண்டத்தரிப்பில் நூலகக் கண்காட்சி

வலி.தென்மேற்கு பிரதேச சபையின் உப அலுவலகமும் பண்டத்தரிப்பு பட்டின சபையும் இணைந்து நடத்தும் நூலகக் கண்காட்சி இன்றும் நாளையும் நடைபெறவுள்ளது.

உப அலுவலகத்தின் பொறுப்பதிகாரி ஞா.தேவச்சந்திரன் தலைமையில் பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலையில் காலை 9 மணிமுதல் பி.ப. 3 மணி வரை இக்கண்காட்சி நடைபெறும்.

இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை அதிபர் திருமதி கே.சிவராசா கலந்துகொள்வார். (50-100-29)

## கல்விச் செயலமர்வு

தென்மராட்சி கல்விவலயப் பாடசாலைகளில் தரம் மூன்று வகுப்புகளில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான விசேட கல்விச் செயலமர்வு நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 8மணிக்கு சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் ஆரம்பமாகுமென வலயக்கல்விப்பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் அறிவித்துள்ளார். (203- 207)

## மரண அறிவித்தல்

### அருணாசலம் அமிர்தலிங்கம்

(ஓய்வுபெற்ற உத்தியோகத்தர், கல்வித் திணைக்களம், யாழ்ப்பாணம்)



பண்டத்தரிப்பைப் பிறப்பிடமாகவும் சுழிபுரம் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட அருணாசலம் அமிர்தலிங்கம் நேற்று (01.07.2009) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அருணாசலம் தம்பதியரின் அன்பு மகனும் கலைச்செல்வி (ஜேர்மனி), பவானி, முரளிதரன் (லண்டன்), சிறீதரன் (உரிமையாளர், வளர்பிறை பட்டுச்சோலை, சங்கானை) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.07.2009) வியாழக்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருவடிநிலை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஆறுமுக வித்தியாசாலை ஒழுங்கை,
சுழிபுரம் கிழக்கு, சுழிபுரம்.

தகவல்:
குடும்பத்தினர்.


## வீடு விற்பனைக்கு

புங்கன்குளம் சந்திக்கு அருகாமையில் 2 பரப்புக் காணியில் அமைந்த சகல வசதிகளையும் கொண்ட வீடு விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 165/1, கண்டி வீதி,
சின்னக்கிணற்றடி லேன்,
அரியாலை, யாழ்ப்பாணம்.
(சி/559307)

## வேலையாள் தேவை

யாழ்.குருநகர்ப் பகுதியில் இயங்கும் இரும்புத் தொழிற்சாலை ஒன்றிற்கு 'கேற்கிறில்'' இரும்பு வேலைகள் செய்யக் கூடிய பணியாள் தேவை.

தொடர்பு: 0779050186
021 222 2846


## மரண அறிவித்தல்

### கந்தையா பசுபதி



நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும் புளியங்கூடலை வசிப்பிடமாகவும் 105/01, கண்டி வீதி, யாழ்ப்பாணத்தை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா பசுபதி 30.06.2009 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா-நாகமுத்து தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற நாகலிங்கம்- பார்வதி தம்பதியரின் அன்பு மருமகனும் கனகம்மாவின் அன்புக் கணவரும் அரசரெத்தினம், சறோஜாதேவி, வசந்தகுமார், யோகாதேவி, விமலாதேவி, இந்திராதேவி (சுவிஸ்), ஜெயக்குமார் (ஜேர்மனி), ரவீந்திரகுமார் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையும் தவமலர், இலங்கைநாதன், ரோகிணி, சண்முகலிங்கம் (கிராம அலுவலர், நெடுந்தீவு கிழக்கு), புவனேந்திரன் (ஸ்ரீகாந் புத்தகசாலை, நல்லூர்), உதயகுமார் (சுவிஸ்), புஷ்பலதா (ஜேர்மனி), சுதா (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனும் காலஞ்சென்றவர்களான அருணாசலம், நாகேசு மற்றும் மாணிக்கம், வள்ளியம்மை, கணபதிப்பிள்ளை, சின்னத்தங்கம், பார்வதி, நாகரத்தினம் ஆகியோரின் அருமைச் சகோதரனும் மகேஸ்வரி, தையலம்மை, காலஞ்சென்றவர்களான இராமலிங்கம், முருகேசு மற்றும் திருமகள், சொக்கலிங்கம், அமரர் அப்புக்குட்டி, குஞ்சுமணி, சண்முகம், அமரர் சின்னத்தம்பி ஆகியோரின் மைத்துனரும் துஷ்யந்தன் (லண்டன்), Dr.துஷ்யந்தி (கொழும்பு), துஷாந்தன், காண்டீபன், கார்த்திகா, ஜனனி, ஜனார்த்தனன், கஜானி, கீர்த்தனி, கீர்த்தனன், விபீஷணி, மயூரன், மயூரி, அபிநயா, அபிஷேக், அனுஷா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (02.07.2009) வியாழக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

105/01, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.
(86667)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாவது பிறந்தநாள் வாழ்த்து



முகுந்தன் - தர்ஷினி
தம்பதியரின் செல்வப் புதல்வி
அக்ஷரா தனது முதலாவது
பிறந்ததினத்தை லண்டனில் உள்ள
தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக்
கொண்டாடுகின்றார்.

இவரை அன்பு அப்பா, அம்மா,
அண்ணன்மார், அம்மப்பா, அம்மியா,
அப்பப்பா, அப்பம்மா, பாட்டி,
பெரியமாமா, சின்னமாமா, டிமாமார்,
மாமிமார், மச்சான்மார், மச்சாள்மார்,
சித்தப்பா மற்றும் உற்றார், உறவினர்,
நண்பர்கள் அராலி ஆவரம்பிட்டி
முத்துமாரி அம்பாள் துணை கொண்டு
பல்லாண்டு காலம் வாழ்கவென
வாழ்த்துகின்றார்கள்.

திரு.திருமதி இலங்கைராசா -
சரோஜினிதேவி
(அம்மப்பா - அம்மம்மா)
Dr.சுப்பிரமணியம் வீதி,
சுன்னாகம்.

## முகுந்தன் அக்ஷரா

# ஆன்மீக சாதனைகள் எதற்காக?

மகனுக்கு தந்தையின் சொத்தில் பங்குரிமை ஏற்படுகிறது. அந்த உரிமைக்குப் போராட வேண்டும். அதுவே மனிதனுடைய முக்கியமான சாதனை. தெய்வத்தின் அருகே செல்ல முயற்சிக்க வேண்டும். அதுவே சாதனை.

ஜடம் செய்வதும், தியானம் செய்வதும் எல்லாம் சாதனைகள் கிடையாது. இதெல்லாம் வீண் நேரம். தியானம் செய்வதாகச் சொல்கிறாய். யார் மேல் தியானிக்கிறாய்? நீ வேறு கடவுள் வேறா? நீ தெய்வத்தைக் குறித்து தியானிப்பதாகச் சொன்னால் நீ வேறு தெய்வம் வேறு என்றாகி விடுகின்றது. தெய்வத்தின் பெயரை ஸ்மரிப்பதாகச் சொன்னால் நீ வேறு இறைவன் வேறு என்று இரண்டாகின்றது. இது பிரிக்கிறது. இந்தப் பிரிக்கும் தன்மை நமக்கு இருக்கக் கூடாது. பிரித்தலும் கூடாது. பந்தமும் கூடாது. ஏகத்துவம் என்ற ஒருமைத்தன்மை மட்டுமே இருக்கவேண்டும்.

எதெல்லாம் ஆத்மா இல்லையோ அதனை மறக்க ஆன்மீக சாதனைகள் அவசியம். ஆத்மா அல்லாதவற்றை மறக்கும் போது ஆத்மாவைப் பற்றிய நினைவு தானாக எழும். ஆத்மா, அனாத்மா என்று வேறு வேறானது கிடையாது. அனாத்மா என்பதும் கூட ஒருவகையான உள்ளுணர்வே. இங்கே பல்புகள் எரிந்து கொண்டிருக்கின்றன. சுவிச்சை நிறுத்தும் போது விளக்குகள் அணைந்து போகின்றன. இருள் சூழ்ந்து கொள்கிறது. எங்கிருந்தது இது. விளக்கு எரியத் தொடங்கியதும் இருள் விலகுகிறது. இருள் எங்கேயும் போவதுமில்லை. வருவதுமில்லை. விளக்கொளியின் மாற்றங்களே. இருளைக் காட்டு வதும் விலக்குவதுமாக இருகின்றது. அதேபோல ஆத்மாவின் மாற்றமே அனாத்மா. ஆகவே அனாத்மா என்ற ஒன்றை விலக்க வேண்டிய அவசியமே இல்லை. ஏனெனில் அனாத்மா என்ற ஒன்றே கிடையாது. இவை யெல்லாம் பிரமைதானேயன்றி வேறெதும் கிடையாது. நமது ஆன்மீக சாதனைகளும் கூட பிரமையை எதிர்கொள்வதற்கும் அதனை திருப்திப் படுத்துவதற்கும்தான்.



## சாயி சிந்தனை



யாழ்.மாநகர சபை எல்லைக்குள் பத்தாயிரம் நிழல் மரங்களை நடும் திட்டம் கடந்த திங்கட்கிழமை ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகமும் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சருமான டக்ளஸ்தேவானந்தாவினால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. யாழ்.சித்த ஆயுள்வேத மருத்துவக் கல்லூரிச் சமூகத்தினர் ஈ.பி.டி.பியுடன் இணைந்து இத்திட்டத்தை ஆரம்பித்திருப்பது குறிப்பிடத்தக்கதாகும். ஆரம்ப வைபவம் கலட்டி மெதடிஸ்த மிஷன் தமிழ் கலவன் பாடசாலையில் நடைபெற்றது. யாழ்.மாநகர சபை எல்லைக்குள் மலைவேம்பு, அசோகா, சமண்டலை, நெல்லி, மரமுந்திரிகை, சவுக்கு போன்ற நிழல் மற்றும் பயன்தரும் பத்தாயிரம் மரங்கள் நடத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

# யாழ்/கலாநிதி ஆ.தியாகராசா மத்திய மகா வித்தியாலயம், காரைநகர்

(இந்துக் கல்லூரி - காரைநகர்)

## விசேட பொதுக்கூட்டம்


06.07.2009 அன்று நடைபெறவிருந்த கூட்டம் தவிர்க்கமுடியாத காரணத்தால் 19.07.2009 ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு நடராசா ஞாபகார்த்த மண்டபத்தில் நடைபெறும்.

பழைய மாணவர் சங்க உறுப்பினர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள் தவறாது சமுகம் அளிக்கவும்

வே.சபாலிங்கம்
செயலாளர்.

(82456)

# 31ஆம் நாள் நினைவு ஆத்ம சாந்திப் பிரார்த்தனை அழைப்பு



கடந்த 03.06.2009
புதன்கிழமை அன்று
சிவபதமடைந்த
எமது குடும்ப சிகரம்
அமரர்

## தம்பிஜயா பாலகுமாரநாதன்

(கண்மணி)
(ஏகாதசி திதி - 02.07.2009)

அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (02.07.2009) வியாழக்கிழமை முற்பகல் 10 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் குடும்பசகிதம் வருகைதந்து அன்னாரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்

இல.52, பிரதான வீதி,
ஆனைக்கோட்டை.
தொ.பே.: 021 222 2753

மனைவி, பிள்ளைகள்,
சகோதரர்: தம்பிஜயா ரவீந்திரநாதன்.

# மரண அறிவித்தல்

## திருமதி சுப்பிரமணியம் முத்துப்பிள்ளை



மீசாலை கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சுப்பிரமணியம் முத்துப்பிள்ளை 30.06.2009 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் பொன்னையா - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் சுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற சின்னராசா மற்றும் நாகேந்திரம், குலேந்திரம், இராசேந்திரம், கன்னிகாதேவி, மகேந்திராதேவி, இந்திராதேவி, சந்திராதேவி (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தாயும் யோகேஸ்வரி, மகாதேவி, முருகசோதி, தவமணிதேவி; குணரத்தினம், சின்னத்துரை, ஆனந்தராசா, உதயகுமார் ஆகியோரின் அன்பு மாமியும் கேமவர்ச்சனி, கேமமாலினி, திவாகரன், சுபாகரன், ஜனகன், ஜனார்த்தனி, நிருபானந்தன், லோகானந்தன், லயானந்தன், தயானந்தன், அருளானந்தன், கவிதா, லலிதா, வசீகரன், ஜசிதா, செந்தூரன், சுபேசன், சுபேந்தினி, சயந்தன், பிரதீபன், ரிஜதீபா, நிசாந்தன், நிதுர்ஜா, நிவேதா ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் எதிர்வரும் (04.07.2009) சனிக்கிழமை பி.ப. 1 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக மீசாலை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

மீசாலை கிழக்கு,
மீசாலை.

(88657)

# விளையாட்டுப் போட்டிகளை நடத்துவதன் மூலம் மாணவர்களின் மனங்களில் சிறந்த மாற்றம் ஏற்படும்

## சண்டிலிப்பாய் இந்து அதிபர் உரை

யாழ்ப்பாணம், ஜூலை 2

முன்பள்ளி மாணவர்களுக்கு நடத்தப்படும் விளையாட்டுப் போட்டிகள் ஊடாக அவர்களின் உடல், உளரீதியில் சிறந்த மாற்றங்களை ஏற்படுத்த முடியும்.

சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி அதிபர் வ.ஸ்ரீகாந்தன் இவ்வாறு தெரிவித்தார்.

சண்டிலிப்பாய் மேற்கு மணிமேகன் முன்பள்ளி மாணவர்களின் விளையாட்டு விழா அண்மையில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

அந்த நிகழ்வில் கௌரவ விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் உரையாற்றுகையில் மேலும்தெரிவித்தவை வருமாறு.

மணிமேகன் முன்பள்ளியானது பல வருடங்களாகத் தனது கல்விச்சேவையினை இந்தக் கிராமத்தில் மேற்கொண்டு வருகின்றது.

அங்கு கல்வி கற்ற மாணவர்கள் எமது கல்லூரியில் இணைந்து கொள்கின்றனர். அந்த மாணவர்கள் தமது அனைத்துச் செயற்பாடுகளிலும் முன்னணியில் திகழ்ந்து வருகின்றனர்.

முன்பள்ளி மாணவர்களின் உடல், உளரீதியான விருத்தியினை மேற்கொள்வதற்கு விளையாட்டுப் போட்டிகள் பெரி தும் உதவுகின்றன.

அத்தகைய முன்பள்ளி மாணவர்களது எதிர்கால வளர்ச்சிக்குப் பெரிதும் பெற்றோ ரின் பங்களிப்பு அவசியமாகின்றது. மாண வர்களைப் பல்துறைகளிலும் வளர்த்துக் கொள்வதற்கு நல்லதொரு வழிகாட்டல் அவசியம் - என்றார். (9)

# ஆண்டு நிறைவும் சான்றிதழ் வழங்கலும்

யாழ்ப்பாணம், ஜூலை 2

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி தொழில்நுட்பநிறுவனம், மருதனார் மடம் விவசாய நிறுவனம் ஆகியவற்றின் 23ஆவது ஆண்டு நிறுவன தினமும் சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு மருதனார்மடம் விவசாய நிறுவனத்தில் நடைபெறவுள்ளது.

நிறுவன ஆளுநர் சபைத்தலைவர் முன்னாள் பேராயர் தென்னிந்தியத் திருச்சபை அருட்கலாநிதி எஸ்.ஜெபநேசன் தலைமையில் நடைபெறும். இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக யாழ்.பல்கலைக் கழக பௌதிகவியல் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி ரவிராஜன், சுண்டுக்குளி மகளிர் கல்லூரி ஆசிரியர் திருமதி வாசுகி ரவிராஜன் ஆகியோர் கலந்துகொள்வர். (201)

# சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், ஜூலை 2

சுன்னாகம் கிழக்கு சொர்ணவரத பத்திரகாளி அம்பாள்ஆலய வருடாந்த அலங்காரத் திருவிழா நாளை மறுதினம் சனிக்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறவுள்ளது. தினமும் முற்பகல்10மணிக்கு அபிசேகம் ஆரம்பமாகி 11மணிக்கு விசேட பூசையைத் தொடர்ந்து நண்பகல் 12 மணிக்கு மகேஸ்வர பூசை இடம்பெறும்.

எதிர்வரும் 14ஆம் திகதி காலை 8மணிக்கு 1008 சங்காபிஷேகம் நடைபெறவுள்ளது. (201)

* * *

வேலணை, ஜூலை 2

சரவணை பள்ளம்புலம் முருகமூர்த்தி ஆயலத்தில் புதிதாக அமைக்கப்பட்ட புதிய சிற்பத்தேர் வெள்ளோட்ட விழா எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.05மணிக்கு நடைபெறவுள்ளது. அன்றைய தினம் மலர் வெளியீடும் இடம் பெறவுள்ளது.

(201 - 167)

* * *

தச்சந்தோப்பு அரசடி பத்திரகாளி அம்மன் ஆலய வருடாந்த அலங்காரத்திருவிழா நாளை வெள்ளிக்கிழமை காலை 9மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பன்னிரெண்டு தினங்கள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 13ம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் செவ்வாய்க்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (201- 288)

* * *

யாழ்ப்பாணம், ஜூலை 2

யாழ். வண்ணை வேங்கடேச வரதராஜப்பெருமாள் ஆலய மகா சங்காபிஷேகம் நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 7.30 மணிக்கு நடைபெறவுள்ளது. (201)

* * *

யாழ்ப்பாணம், ஜூலை 2

புனித யாத்திரைத் தலமான புங்குடுதீவு அந்தோனி முனீந்திரர் ஆலய வருடாந்த பெருந்திருவிழா நாளை வெள் ளிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும். அன்றையதினம் பி.ப. 5 மணிக்கு அருட்தந்தை லியோ ஆம்ஸ்ரோங் தலைமையில் திருப்பலி இடம்பெறும்.

எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை தேர்த்திருவிழா இடம் பெறும். (201)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# மற்றொரு சர்வகட்சிக் குழு உதயம்

அபிவிருத்தி மற்றும் நல்லிணக்கம் தொடர்பான விடயங்கள் குறித்து ஆராய்ந்து அவை தொடர்பில் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகளை சிபாரிசு செய்யும் நோக்குடன் தமது தலைமையின் கீழ் அனைத்துக் கட்சிக் குழு ஒன்றை அமைப்பதற்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தீர்மானித்திருக்கின்றார் என்று அரச தகவல் திணைக்களம் தெரிவித்திருக்கின்றது.

ஜனாதிபதியின் தலைமையின் கீழ் ஜனாதிபதி செயலகத்தில் இந்த அனைத்துக் கட்சிக் குழுவின் கன்னிக் கூட்டம் இன்று நடைபெறும் என்றும், அதன் பின் மாதாந்தம் இந்தக் குழுவின் கூட்டம் தொடர்ந்து இடம்பெறும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இனப்பிரச்சினைக்கான தீர்வை சிபாரிசு செய்யும் நோக்குடன் 2006 ஜூனில் ஜனாதிபதியால் அமைக்கப்பட்ட சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவின் செயற்பாடு தொடருமா, அதன் பணி அடுத்த ஒரு மாத காலத்தில் ஒரேயடியாக முடிவுக்கு வந்துவிடுமா என்ற சந்தேகங்கள் கிளம்பியுள்ள சூழலிலேயே 'அபிவிருத்தி மற்றும் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கான சர்வகட்சிக் குழு' என்ற மற்றொரு அமைப்பின் ஸ்தாபிதம் பற்றிய அறிவிப்பு வெளியாகியிருக்கின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

இதுவரை - கடந்த மூன்று ஆண்டுகளாக - செயற்பட்டு வரும் சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழு, இக்காலகட்டத்தில் மொத்தம் 120 அமர்வுகளை நடத்தி 'சாதனை' படைத்திருக்கின்றது.

என்றாலும் கூட, இந்த மூன்று ஆண்டு காலத்தில் -

அரசமைப்பின் பதின்மூன்றாவது திருத்த ஏற்பாடுகளை இடைக்கால நடவடிக்கையாக அரசு நடைமுறைப்படுத்தலாம் என்று தெரிவிக்கும் 'உப்புச்சப்பற்ற' ஓர் இடைக்கால சிபாரிசு அறிக்கையை அரசுத் தலைவரிடம் கையளித்தமையையும், நாட்டின் தேசிய இனப்பிரச்சினைத் தீர்வுக்கான திட்டத்தில் தொண்ணூறு வீதமான விடயங்களில் கட்சிகளிடையே இணக்கப்பாடு ஒன்றை ஏற்படுத்திவிட்டாயிற்று என்று அறிவித்தமையையும் தவிர இந்த சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழு பெரிதாக சாதித்தவை எவையுமில்லை என்றே கூறலாம்.

இனியும், அடுத்த ஒருமாத காலத்துக்குள் தீர்வு யோசனையுடன் அது வருமா என்பதையும் பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.

'சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழு' என்ற அதன் பெயரே பொருத்தமற்றது என்று குறிப்பிடும் அளவுக்கு அதில் பல கட்சிகளினதும் பங்களிப்புகள், குறைந்து, குறைந்து இந்த மூன்று ஆண்டு காலத்தில் அந்த அமைப்பே குறுகி வெற்றும் வறிதாகியும் போனதுதான் மிச்சம்.

இந்தக் குழுவின் கூட்டங்களுக்குத் தமிழர்கள் தரப்பின் பிரதான அரசியல் கட்சியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆரம்பம் முதலேயே அழைக்கப்படவேயில்லை. இந்தக் குழு, இனப்பிரச்சினைக்குத் தீர்வாகத் தென்னிலங்கையின் நல்லிணக்க உடன்பாட்டை சிபாரிசு செய்யவே நிறுவப்பட்டது என்பதால், அதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சேர்க்கப்படவில்லை என்று ஆரம்பத்தில் சாட்டுக் கூறப்பட்டது. ஆனால் இப்போது தென்னிலங்கைக் கட்சிகள் இடையே கூட நல்லிணக்கமான உடன்பாடு ஒன்றை எட்டவைக்க இயலாத கட்டத்தில் - [illegible]கயறு நிலையில் - நிற்கிறது அந்த சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழு.

இக்குழுவிலிருந்து பிரதான இரு எதிர்க்கட்சிகளான ஐ.தே.கவும், ஜே.வி.பியும் எப்போதோ வெளியேறிவிட்டன. அடுத்த பிரதான் எதிர்க்கட்சியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு இதில் பங்குபற்ற அழைப்பே இல்லை. போதாக்குறைக்கு அதில் அங்கம் பெறுவதிலிருந்து, அரசுக் கூட்டமைப்புக் கட்சிகளான ஜாதிக ஹெல உறுமய, மக்கள் ஐக்கிய முன்னணி போன்ற பேரினவாதக் கட்சிகள் ஏற்கனவே ஒதுங்கிவிட்டன.

இந்தப் பின்புலத்தில் அரசுக் கூட்டமைப்பில் எஞ்சி உள்ள ஒருசில கட்சிகளையும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், மனோகணேசன் தலைமையிலான ஜனநாயக மக்கள் முன்னணி போன்ற ஓரிரு எதிரணிக் கட்சிகளையும் வைத்துக்கொண்டு 'சர்வ கட்சிப் பிரதிநிதிகள் குழு' என்ற பெயரில் காயை இனியும் நகர்த்துவதற்கு அரசுத் தலைமைக்குக் கஷ்டமாக இருந்திருக்கக்கூடும்.

அதனாலோ என்னவோ 'அபிவிருத்திக்கும் நல்லிணக்கத்துக்குமான சர்வ கட்சிக் குழு' - என்ற புதிய கட்டமைப்புக்கு இப்போது கால்கோலிடப்பட்டிருக்கின்றது.

இந்தக் குழுவில் பங்குபற்றுவதற்கு அனைத்துத் தமிழ்க் கட்சிகளுக்கும் அழைப்பு அனுப்பப்படுமா, தமிழ்க் கட்சிகள் உட்பட எதிர்க்கட்சிகள் அனைத்தும் அரசுத் தரப்பினருடன் சேர்ந்து இந்தப் புதிய அமைப்பில் பங்குபற்றுமா, இந்தப் புதிய கட்டமைப்பின் பங்கு, பணி மற்றும் நோக்கம், செயற்பாடு ஆகியவை எங்ஙனம் அமையும் - என்பவையெல்லாம் இனித்தான் மெல்ல மெல்லத் தெரியவரும்; அம்பலமாகும்.

ஒருபுறம் காலாவதியாகும் நிலையில் சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழு. மறுபுறத்தில் புதிதாக உதயம் எடுக்கவிருக்கும் 'அபிவிருத்திக்கும் நல்லிணக்கத்துக்குமான சர்வகட்சிக் குழு' என்ற கட்டமைப்பு.

இந்த மாற்றம் 'கத்தி போய் மேளம் வந்தது டும்! டும்! டும்!' என்ற கதையாக அமைந்து - விடாமல் இருந்தால் சரி.

இனப்பிரச்சினைத் தீர்வுக்கு அப்பால் அபிவிருத்தி குறித்தும் இந்தப் புதிய கட்டமைப்பு ஆராயவிருப்பதாகக் கூறப்படுவது முக்கியமானது. யுத்தத்தினால் பெரிதும் பாதிக்கப்பட்டு, பேரழிவுகளைச் சந்தித்து நிற்கும் தமிழர்களின் அவசர, அவசிய மனிதாபிமானத் தேவைகளையும், உடனடி எதிர்பார்ப்புகளையும் பூரணமாக நிறைவு செய்யும் பணிக்கு இந்தப் புதிய அமைப்பு முக்கியத்துவம் கொடுக்குமானால் அது சாலச்சிறந்ததே.

# யாழ்.மாநகர சபைக்கு 33 வருடங்களின் பின்னர் சு.கவின் சார்பில் புதிய மேயர் நியமிக்கப்படுவார்

## அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த தெரிவிக்கின்றார்



கொழும்பு, ஜூலை 2

யாழ்., வவுனியா மக்களின் இயல்பு நிலைமை வழமைக்கு திரும்பியுள்ளதுடன் மாணவர்களின் கல்விசெயற்பாடுகளும் துரிதப்படுத்தப்பட்டுள்ளன. இவ்வாறான நிலையில் உள்ளூராட்சித் தேர்தலுக்குப் பின்னர் யாழ்ப்பாணம் தொண்டராசிரியர்களுக்கு ஆசிரிய நியமனம் வழங்கப்படும் என்று ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச்செயலாளரும் கல்வியமைச்சருமான சுசில் பிரேம ஜயந்த தெரிவித்தார்.

யாழ். மாநகர சபைக்கு 33 வருடங்களின் பின் எமது கட்சியின் சார்பில் புதிய மேயர் நியமிக்கப்படுவார் என்றும் அவர் சொன்னார். 'நாட்டை வெற்றி கொண்டு கிராமத்தைக் காப்போம்' எனும் தொனிப்பொருளில் மஹா வலி மத்திய நிலையத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தேர்தல் நடவடிக்கை தொடர்பிலான ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்;

யாழ் மாநகர சபை, வவுனியா நகர சபை ஆகிய இரண்டில் ஆளும் ஐக்கிய தேசிய முன்னணி கூட்டணியில் போட்டியிடுகின்றது. வவுனியாவை பொறுத்தமட்டில் சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் அன்னியோன்யமாக வாழ்வதை காணமுடிந்தது. யாழ்ப்பாணத்தைப் பொறுத்தமட்டில் அம்மக்கள் சுதந்திரமாக வாழ்ந்து வருக்கின்றனர்.

யாழ்ப்பாணத்தில் தொண்டராசிரியர்களாக கடமையாற்றிவர்களுக்கான நேர்முக பரீட்சைகள் நிறைவடைந்துவிட்டன. தேர்தலுக்கு பின்னர் அவர்களுக்கான நியமனங்கள் வழங்கப்படும். வடக்கை பொறுத்தமட்டில் கல்வி உள்ளிட்ட உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டு வருக்கின்றன. யாழ் மாநகர சபையை பொறுத்தமட்டில் 33 வருடங்களுக்கு பின்னர் எமது கட்சியில் மாநகர மேயர் ஒருவர் நியமிக்கப்படுவார் - என்றார். (50)

## சித்த மருத்துவப் பிரிவின் வெள்ளி விழா ஆரம்ப நிகழ்வு

யாழ்.பல்கலைக்கழக சித்த மருத்துப் பிரிவின் வெள்ளிவிழா ஆரம்ப நிகழ்வு இன்று வியாழக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக கைதடி சித்த மருத்துவப் பிரிவின் சித்த மருத்துவத்துறை அரங்கில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் நா.சண்முகலிங்கன் கலந்துகொள்வார்.

## 'செந்தில் முருகையா காதை' நாளை ஆலயத்தில் வெளியீடு

யாழ்ப்பாணம், ஜூலை 2

வட்டுக்கோட்டையின் பழம்பெரும் பதிகளில் ஒன்றான செந்தில் முருகையா மீது பாடப்பட்ட செந்தில் 'முருகையா காதை நூல்' வெளியீட்டு விழா நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு ஆலய மண்டபத்தில் நடைபெறும். வட்டூர் சந்தக்கவி கலாபூசணம் நா.புவனசுந்தரம் செந்தில் முருகையா மீது பாடிய இக்காதை நாளை ஆலய மண்டபத்தில் அரங்கேற்றப்படும். (அ)

# லண்டனில் இருந்து வந்த குழந்தைக்கு பன்றிக்காய்ச்சல்

கொழும்பு, ஜூலை 02

லண்டனில் இருந்து அண்மையில் நாடு திரும்பிய 4 வயது ஆண் குழந்தைக்கு பன்றிக்காய்ச்சல் பீடித்திருக்கிறது என கொழும்பு தொற்றுநோய் வைத்திய ஆராய்ச்சி நிலையம் தெரிவித்தது.

அப்பிரிவின் விசேட நிபுணர் கீதாணி விக்கிரமசிங்க இதனைத் தெரிவித்தார்.

சில நாள்களுக்கு முன்பு நாடு திரும்பிய இக் குழந்தைக்குக் காய்ச்சல் அறிகுறிகள் தோன்றியதையடுத்து பெற்றோர் அங்கொடை ஐ.டி.எச். வைத்தியசாலையில் வைத்திய பரிசோதனைக்காகக் குழந்தையைச் சேர்த்துள்ளார்.

இக் குழந்தையுடன் சேர்த்து இதுவரை 16 பேர் இந்நோயால் பீடிக்கப்பட்டு அங்கொடை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்தனர் எனவும், அவர்களில் எண்மர் பூரண குணமடைந்து சென்றுவிட்டனர் எனவும், இன்னும் எண்மர் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றனர் எனவும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (சி)

# இன, மத பேதமின்றி சகலரும் நீதியைப் பெறக்கூடிய சூழ்நிலை இலங்கையில் உருவாக்கப்படவேண்டும்

## சர்வதேச அனர்த்தக்குழு வேண்டுகோள்

நியூயோக், ஜூலை 2

இன,மத பேதங்களின்றி சகலரும் நீதியைப் பெற்றுக்கொள்ளக்கூடிய ஓர் சூழ்நிலை இலங்கையில் உருவாக்கப்படவேண்டும் என சர்வதேச அனர்த்தக் குழு கோரிக்கை விடுத்துள்ளது.

நாட்டில் சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுவதற்கு இலங்கை அரசாங்கம் உடனடியாக நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென சர்வதேச அந்தக் குழு அறிவித்துள்ளது.

இலங்கையில் நீதித்துறை அரசியல் மயப்படுத்தப்பட்டுள்ளதாக அந்த அமைப்பு குறிப்பிட்டுள்ளது.

அண்மையில் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் நடைபெற்ற யுத்தத்தில் அரசாங்கம் அடைந்த வெற்றிகள் கூட இவ்வாறான செயல்களின் மூலம் வலு விழக்கக் கூடுமென அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மனித மற்றும் அரசியல் சாசன உரிமைகள் பூரணமாக நிலைநாட்டப்பட்டால் மட்டுமே நாட்டில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்த முடியும் என தெரிவிக்கப்படுகிறது.

இதற்கு முன்னர் பதவியிலிருந்த பிரதம நீதியரசர் சிங்கள கடும்போக்குடைய கட்சிகளுக்கு ஆதரவ ளித்து வந்ததாக சர்வதேச அனர்த்த குழுவின் ஆசிய பிராந்திய பணிப்பாளர் ரொபர்ட் டெம்லர் தெரிவித்துள்ளார்.

நீதிமன்றங்கள் வழங்கிய சில தீர்ப்புக்கள் இனங்களுக்கு இடையிலான பிரிவினை வாதத்தை மேலும் வலுப்படுத்தியதாக அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

சட்டவிரோதக் கைதுகள் மற்றும் பாதுகாப்புப் படையினரால் மேற்கொள்ளப்படும் உரிமை மீறல்கள் குறித்து நீதிமன்றங்கள் இதுவரையில் காத்திரமான தீர்ப்புக்களை வழங்கியதில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

நீதிமன்றங்களின் சுயாதீனத் தன்மையை நிலைநாட்டுவது மிகவும் இன்றி அமையாதது என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

அரசியல் தலைவர்கள் சட்டம் ஒழுங்குகளை சரிவரக் கடைப்பிடிக்காத வகையில் நீதிமன்றக் கட்டமைப்பு வெறும் கட்டடங்களுக்கு வரையறுக்கப்பட்டிருக்கும் என அவர் தெரிவித்துள்ளார். (50)

## நாளை

| | |
|---|---|
| ஆனி 19 | 03.07.2009 |
| | வெள்ளிக்கிழமை |
| திதி: | ஏகாதசி |
| | மு.ப. 09.35 வரை |
| நட்சத்திரம்: | விசாகம் |
| | மா 05.30 வரை |
| சுபநேரம்: | 05.57 - 07.27 |
| ராகுகாலம்: | 10.27 - 11.57 |

## நன்றியுடன்.....

நாய் வீட்டைக்காக்கும். நாய் நன்றியுள்ள பிராணி. ஆரம்ப வகுப்பில் நாயைப்பற்றிப் படித்த ஞாபகம். ஆனால் இப்போது முதல் வாக்கியம் சரியானது தானா? என ஐயம் கொள்ள வைக்கிறது. காரணம் திருடர்களும் கொள்ளையர்களும் வீடுவீடாய் தமது கைவரிசையை காட்டி வருகின்றனர். இதுவரை வீட்டைக் காக்க இந்த நாய்களால் முடியவில்லை. ஆனால் எமது றோட்டைத் தாக்கத் தவறவில்லை. காலையில் தவறாது அவர்கள் செய்யும் கடமையது. நம் கடமை நிமிர்த்தம் காலையில் சைக்கிலிளோ அல்லது மோட்டார் சைக்கிளிலோ செல்லும் போது றோட்டை அவதானித்த படியே வெட்டியாட வேண்டும். - இல்லை ஓட வேண்டும். சைக்கிள், மோட்டார் சைக்கிள் லைசன்ஸ் பெற எட்டுப் போட்டுப் பழக யாழ் நூலகத்திற்குப் போகவேண்டியதில்லை. எமது றோட்டே போதும் நல்ல பயிற்சிக் களம். இந்த வகையில் நாய்க்கு நாங்கள் தான் நன்றியுள்ளவர்களாக இருக்கவேண்டும்.

இரண்டாவது வாக்கியத்தை இந்த வளர்ப்பு நாய்கள் நன்றியுடன் அமுல்படுத்தி வருகின்றன. தமது வீட்டை அசிங்கப்படுத்தாது றோட்டையே நாடுகின்றன. றோட்டு பொதுச் சொத்து என அவைகளுக்கும் தெரியும் போலிருக்கிறது. யாழ் குடாநாட்டில் எத்தனை நாய்கள் உள்ளன என யாரும் கணக்கிட்டதாக தெரியவில்லை. தெரிந்தால் நிச்சயமாக அவை குடாநாட்டின் சனத்தொகையை

காலமும்... கோலமும்...

மிஞ்சிவிடும். மோட்டார் சைக்கிள் ஓட்டிகளுக்கு நாய் தான் முதல் எதிரி. அனேகமாக விபத்துக்கள் நாயுடன் தான். அண்மையில் வெளிநாடு ஒன்றில் தரையிறங்கிய விமானத்தையே புரட்டிவிட்டது ஒரு நாய். அந்த நாய்க்கு கின்னஸ் புத்தகத்தில் இடம்பிடிக்க உத்தேசம் போல் தெரிகிறது. சற்றுப் பொறுங்கள் தூரத்தில் ரஷ்சிய லைக்கா(Lika) விண்வெளியில் இருந்து என்னைப் பார்த்து சவால் விடுகிறது. மனித குலத்திற்காக தன் உயிரைத் தந்த பெண் நாயல்லவா. அதற்காக லைக்காவிற்கு நன்றி. குடா நாட்டில் இந்த செல்லப்பிராணியின் கடியால் 21 ஊசி போடுபவர்களின் புள்ளிவிவரம் யாழ் வைத்தியசாலையில் அறியலாம். பரிதாபமாக உயிர் இழந்தவர்கள் பற்றிய புள்ளி விவரம் கிடைக்குமோ தெரியவில்லை. நாம் வளர்ப்பு நாய்களுக்கு விசர் ஊசி போட மறப்பதில்லை. மறந்தவர்கள் தமக்கு ஊசி போட வேண்டிய நிலைதான். நாய்கள் நம்பர்வண் இருந்து விடுமோ என ஒவ்வொரு வீட்டுக் கேற்றிலும் பெரிய பெப்சி வெற்றுப் போத்தலில் நீர் அடைத்துத் தற்காப்புக் கலையை அரங்கேற்றினாலும் நம்பர் ரூவுக்கு என்ன பதில் அதற்கும் ஏதாவது கண்டு பிடிப்பில் ஈடுபடலாமே பாவம் நாய்கள்.. அல்ல நாங்கள்.

முத்துமணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவாந்துறைப் படிப்... மாநகர சபை, யாழ்ப்பாணம்



வடமாகாண அபிவிருத்தியில் இலங்கை வங்கியின் பங்களிப்பு என்ற பொருளில் யாழ்ப்பாண முகாமையாளர் கழகம் நேற்று நடத்திய கருத்தரங்கில் பிரதம விருந்தினராக இலங்கை வங்கியின் தலைவர் கலாநிதி காமினி விக்கிரமசிங்க பங்குபற்றினார். அவர் உரை நிகழ்த்தும் போது எடுக்கப்பட்ட படத்தை மேலேயும் -
கருத்தரங்குக்கு சமுகமளித்த திணைக்களத் தலைவர்கள், கல்விமான்கள் மற்றும் பிரமுகர்களை கீழேயும் - காணலாம். (படங்கள்: லக்ஸ்மன்)

## குடாநாட்டின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்ப்பாணத்தில் உள்ள இலங்கை வங்கிக்கிளைகளிலும் பாதுகாப்புப் பெட்டகங்களை அமைப்பது பற்றி நாம் உத்தேசித்து வருகின்றோம்,

எனினும் பாதுகாப்புப் பெட்டகங்கள் தொடர்பான கணனி வன்பொருள் (Hard-ware) வல்லுநர்கள் சிலரே உள்ளனர்.

இவர்களை அழைத்து வருவதுடன் இதற்குரிய மென்பொருளையும் எடுத்து வர வேண்டும்.

வன்னியிலிருந்து இடம்பெயர்ந்து முகாம்களில் தங்கியுள்ள மக்கள் இலங்கை வங்கியில் வைப்புச் செய்த பணத்தை மீளப் பெற விரும்பினால் அவர்களுக்கு பத்தாயிரம் ரூபா வரை மீளளிப்புச் செய்கிறோம். ஆவணங்கள் எதுவுமில்லாத நிலையில் எமது தற்றுணிவின் அடிப்படையில் துணிந்து மீளளிப்புச் செய்கிறோம்.

**நலன்புரி நிலையங்களில் உள்ள வங்கி ஊழியருக்கு**

வவுனியாவிலுள்ள நலன்புரி நிலையங்களில் இலங்கை வங்கி ஊழியர்களின் குடும்ப உறுப்பினர்கள் அறுபது பேர் உள்ளனர். அவர்களுக்குரிய உணவை இலங்கை வங்கியே தினமும் வழங்கி வருகிறது.

முகாமில் தங்கியுள்ள உத்தியோகத்தர்களின் சம்பளம் வழங்கப்பட்டு வருகிறது. அத்துடன் அவர்களுக்குரிய பதவி உயர்வுகளும் உரிய முறையில் வழங்கப்படும். பணியாற்றாததால் அதில் பின்னடைவு ஏற்படாது.

அவர்களின் அடிப்படைப்பிரச்சினையான குடிதண்ணீர், மலசலகூட வசதி போன்றவற்றையும் தீர்க்க முயற்சித்து வருகிறோம்.

அரசாங்கம் கிளிநொச்சி, மாங்குளம், முல்லைத்தீவு கிளைகளை மீண்டும் ஆரம்பிக்க உத்தரவிட்டதும் இவர்கள் தத்தம் கிளைகளில் கடமையைப் பொறுப்பேற்பர். இவர்களின் விடுதலை தொடர்பாகவும் நாம் படையினருடன் பேச்சு நடத்தியுள்ளோம் - என்றார். (அ-120)

## சீன நிறுவன....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தயாரிப்பு மற்றும் தகவல் தொழில்நுட்பம் தொடர்பான சேவைகளை வழங்குவதில் ஈடுபட்டுள்ள சீன நிறுவனங்கள் இந்த வலயத்தில் தமது உற்பத்தியைத் தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (அ-1)

**PERSONAL CLASS** 364, Stanly Rd., Jaffna. (Near DMI)
மீண்டும்...
தமிழ் (GAQ, B.A., B.A., Final, யாழ்., பேராதனை)
By: K.தர்மராஜா அனுமதிக்கு முந்துங்கள்
ஆரம்பம்: 04.07.09 [காலை 9 மணி முதல் 4 மணிவரை]
Spoken Sinhala By: K.[illegible] 12 - 1 p.m

**உடனடி வேலைவாய்ப்பு**
1) பட்டாக் கணக்காளர்
ஓய்வுபெற்ற அரச ஊழியர்கள் விரும்பத்தக்கது. நகரை அண்டிய பகுதியைச் சேர்ந்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
2) போக்குவரத்து உத்தியோகத்தர்கள்
முன் அனுபவம் உள்ள, நகரை அண்டிய பகுதிகளில் வாழ்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
மூன்று தினங்களுக்குள் நேரில் வரவும்.
ஈஸ்வரன் ரான்ஸ்போட் சேவிஸ்,
69, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்..

## ஜனாதிபதி ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த விடயம் குறித்து தமிழ்க் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் அரியநேத்திரன் நேற்று உதயனுக்குத் தெரிவித்தவை வருமாறு -

நாடாளுமன்ற உறுப்பினர் என்.ஸ்ரீகாந்தா தலைமையிலான கூட்டமைப்பின் ஐந்து நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்தக் கூட்டத்தில் கலந்து கொள்கின்றனர்.

இன்று மாலை (அதாவது நேற்று) எமது கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு தனித் தனியே அழைப்புக்கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன. ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்கவால் இந்த அழைப்புக் கடிதங்கள் அனுப்பப்பட்டன.

நாட்டின் அபிவிருத்தி மற்றும் இடம்பெயர்ந்த மக்கள் தொடர்பான விடயம் குறித்தே இந்தக் கூட்டத்தில் கலந்துரையாடப்படும் என அறிவிக்கப்பட்டது. ஜனாதிபதியின் அலரி மாளிகையில் நாளை (அதாவது இன்று) முற்பகல் 11 மணிக்கு இந்தச் சந்திப்பு நடை பெறுகிறது.

இதற்கு முன்னர் பல தடவைகள் அழைப்பு விடுக்கப்பட்டிருந்தும் நாங்கள் இந்தக் கூட்டத்தில் கலந்துகொள்ளவில்லை. இந்நிலையில் நாளை (அதாவது இன்று) இக்குழுக் கூட்டத்தில் கலந்துகொள்வது என முடிவெடுத்திருக்கிறோம்.

எமது நாடாளுமன்ற குழுத் தலைவர் இக்கூட்டத்தில் கலந்து கொள்ளவில்லை.

பிறிதொரு சந்தர்ப்பத்தில் இரா.சம்பந்தன் தலைமையில் எமது கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் 22 பேரும் சர்வ கட்சிப் பிரதிநிதிகள் குழுக் கூட்டத்தில் கலந்து கொள்வர்- என்றார். (அ-சி)

## முஸ்லிம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிராகரிக்கப்பட்டதன் மூலம் தமது அடிப்படை உரிமை மீறப்பட்டதாகக் குறிப்பிட்டுள்ள மனுதாரர்கள், குறித்த வேட்பு மனுவை ஏற்றுக் கொள்ளும்படி தேர்தல் ஆணையாளருக்கு உத்தரவிடக் கேட்டிருக்கின்றனர்.

## மருதமடு வருடாந்தத்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாதுகாப்புக் கூட்டத்தின்போது இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப் பட்டுள்ளது.

மேஜர் ஜெனரல் ஜகத் ஜயசூரிய, மன்னார் பிரதிப் பொலிஸ் மா அதிபர் எல்.ஐ.சீ. பெரேரா ஆகியோர் தலைமையில் இந்தக் கூட்டம் நடை பெற்றது.

மடுப் பிரதேசத்தை இராணுவத்தினர் கைப்பற்றியது முதல் நிலக்கண்ணி வெடி அகற்றும் பணிகள் தீவிரப்படுத்தப்பட்டிருந்தன எனத் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது புனித மருத மடுப் பிரதேசத்தில் கண்ணி வெடி அகற்றும் பணிகள் முடிவடைந்துள்ளன என இராணுவத்தினர் குறிப்பிட்டுள்ளனர். (சி)

**SHAMROCK**
[illegible], யாழ்.
★ A/L 2011, 2010 கலை, வர்த்தக, கணிதப் பிரிவுகள்
(Poli.Sc, Geo, Dra, Hindu Eng. [illegible])
★ Gr.1 முதல் O/L வரை
(மாதாந்த பரீட்சைகளுடன் ஊக்குவிப்பு பரிசில்களும்)
★ Eng.med. Gr.6 To 11
★ Eng.Lit. Gr.10, 11
★ புலமைப் பரிசில் Gr.5
★ O/L Day Class
(ENG. PAPER CLASS உட்பட)

**வர்த்தகப் பிரிவு A/L 2011**
புதிய பிரிவு II
அலகு 1 இலிருந்து கற்பிக்கப்படும்
ஆரம்பம்: 04.07.2009 சனி 12 மணி
Eco: திரு.[illegible] - 12 - 1 மணி
Acc: திரு.[illegible] - 1 - 2 மணி
Bst: திரு.[illegible] - 2 - 3 மணி
விக்னா கல்வி நிறுவனம்
[illegible], யாழ்.

# குறுகிய மற்றும் நீண்டகால திட்டங்கள் மூலம் அனைத்துப் பிரச்சினைக்கும் தீர்வு காண முடியும்

## பட்டதாரிகள் மத்தியில் அமைச்சர் டக்ளஸ் தகவல்

இன்றைய சூழலில் எம் முன்னுள்ள அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வுகாண குறுகிய மற்றும் நீண்டகாலத் திட்டங் களை நடைமுறைப்படுத்த விருக்கின்றேன்.

சமூக சேவைகள் மற்றும்சமூகநலத் துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யாழ்.மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தினர் நேற்று முன்தினம் வீரசிங்கம் மண்டபத்தில் ஏற்பாடு செய்திருந்த மாபெரும் கூட்டத்தில் கலந்து கொண்டு பேசுகையில் அவர் இப்படிக் கூறினார்.

அவர் மேலும் தெரிவித்தவை வரு மாறு:

மீண்டும் மீண்டும் அரசுடன் மோதல்களைத் தொடரும் திட்டத்துடனேயே புலிகளின் தலைமை ஏற்றுக்கொள்ளவியலாத நிபந்தனைகளை அரசாங்கத்தின் முன் வைத்துவந்தது. புலித்தலைமையின் இவ்வாறான செயற்பாடுகளின் விளைவா கவே தமிழ் பேசும் மக்கள் இன்று தீராத அவல நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

வருமானம் ஒன்றைப் பெற்றுக் கொள்ள முடியாத நிலையில் பட்டதாரி கள் முகம் கொடுத்து வருகின்ற பல்வேறு துன்பதுயரங்களை உணர்வுபூர்வமாக அறிந்துள்ளேன். எதிர்வரும் ஆறு மாத காலத்தில் வேலையில்லாப் பட்டதாரிகளின் பிரச்சினைகளுக்கு படிப்படியாகத் தீர்வுகாண இயலும் என்று நம்புகிறேன்.

யாழ்.நகரத்தை மட்டுமல்லாது யாழ். குடாநாடு முழுவதையும் வளமான பூமி யாக மாற்றக்கூடிய வாய்ப்பு எம் முன்பு உள்ளது. இது எமது மக்களுக்கு கிடைத் துள்ள பொன்னான வாய்ப்பு என்பதை எமது மக்கள் கவனத்தில் கொள்ள வேண்டும்.

எதிர்வரும் யாழ்.மாநகரசபைத் தேர்தல் குடாநாட்டு மக்கள் அனைவரதும் பிரச்சினைகளுக்கான தீர்வின் முதற்படியாகும் என்பதால் இத்தேர்தல் மூலமான வெற்றியைத் தீர்மானிக்கும் சக்தியாக மக்கள் அனைவரும் மாற வேண்டும்.

எமது மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் கரங்களைப் பலப்படுத்தினால் யுத்தம் காரணமாக அழிந்து போயிருக்கும் எமது தேசத்தை இரண்டே வருடங்களில் முழு மையாக மாற்றி யமைக்க முடியும் -என்றார்.

இறுதியில் வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தினர் தங்களது பிரச்சினைகள் தொடர்பில் தொடர்ந்து அக்கறை கொண்டு பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகின்ற அமைச்சரின் கரங்களை பலப் படுத்துவதாக தீர்மானம் மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

## இராணுவத்துக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறிப்பிட்டார்.

இலங்கை அரசிற்கான சர்வதேச ஆத ரவு குறித்து முக்கிய சமிஞ்ஞையாகக் கரு தப்படும் சர்வதேச நாணய நிதியத்தின் கடனுதவி கிடைப்பதை இது மேலும் பாதிக் கக்கூடும் என ரொய்ட்டர் சுட்டிக்காட்டியுள்ளது.

விடுதலைப்புலிகளை தோற்கடிப்பதற்காக 2005ஆம் ஆண்டுக்குப் பின்னர் பல மடங்காக விஸ்தரிக்கப்பட்ட இராணுவத்தை, யுத்தத்திற்குப் பின்னரும் விஸ்தரிக்க வேண்டிய தேவை என்னவென்று மேற்குலக இராஜதந்திரிகள் கேள்வியெழுப்பியுள்ளனர் என்று அச்செய்திச் சேவை குறிப்பிட்டுள்ளது.

விடுதலைப் புலிகளுக்கு எதிரான இறுதி இராணுவ நடவடிக்கையை தாமதப்படுத்துமாறு தாம் விடுத்த வேண்டுகோள்களை அலட்சியம் செய்தமை மற்றும் இலங்கை அரசுக்கு எதிரான ஐ.நா. மனித உரிமைக் கவுன்ஸில் விவாதம் போன்ற முக்கிய விடயங்களால் ஏற்பட்டுள்ள மேற்குலக நாடுகளுடனான அரசியல் இழுபறி காரணமாக ஏற்கனவே தாமதமாகியுள்ள கடனுதவியை இலங்கையின் படைக்கு ஆட்சேர்ப்பு முயற்சிகள் மேலும் தாமதப்படுத்தலாம்.

இராணுவத்தின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்காக நிதியை செலவிடுவதற்குப் பதில் யுத்தத்திற்குப் பிந்திய அபிவிருத்திக்கு அதனைப் பயன்படுத்த வேண்டுமென மேற்குலக இராஜதந்திரிகள் தெரிவிக்கின்றனர். (அ-சி)

## அரசியல் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய ஊடகத் துறை அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபயவர் தனவே மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் கூறியவை வருமாறு:-

தமிழர்களின் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஒன்று வழங்குவது தொடர்பில் பலரும் பல்வேறுபட்ட கருத்துகளைத் தெரிவித்து வருகின்றனர். அரசியல் தீர் வொன்று முன் வைக்கப்படும் என்று சிலரும், அப்படி முன் வைக்கப்படாது என்று சிலரும் கூறுகின்றனர்.

ஆனால், பிரிக்கப்படாத நாட்டிற்குள் அரசியல் தீர்வின் ஊடாகத் தமிழரின் பிரச் சினையைத் தீர்ப்பதற்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மிகவும் அர்ப்பணிப்புடன் செயற் படுகின்றார்.

அரசில் அங்கம் வகிக்கும் கட்சித் தலை வர்களின் கூட்டம் ஒன்று செவ்வாய்க்கிழமை ஜனாதிபதி தலைமையில் அலரி மாளிகை யில் இடம் பெற்றது. அரசியல் தீர்வு தொடர் பாக அங்கு விரிவாகப் பேசப்பட்டது. பலரும் பல்வேறு கருத்துகளை அங்கு முன் வைத்தனர்.

இருப்பினும், அரசியல் தீர்வின் அவசியத்தையும் அதை முன்வைப்பதில் தான் காட்டும் அர்ப்பணிப்பையும் ஜனாதிபதி அப் [illegible]து கட்சித் தலைவர்களுக்குத் தெரி வித்தார்.

**தீர்வை வழங்குவதற்கு அர்ப்பணிப்புடன் செயற்படுகிறார் ஜனாதிபதி**

தன்மேல் நம்பிக்கை வைத்துத் தமிழரின் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஒன்றை முன் வைக்கத் தனக்கு ஒரு வாய்ப்பை வழங்குங் கள் என்று கட்சித் தலைவர்களிடம் ஜனாதி பதி கோரினார்.

இது தொடர்பில் தேசிய இணக்கப்பாட்டை எட்டியதும் அரசியல் தீர்வு சர்வஜன வாக் கெடுப்புக்கு விடப்படும் என்றும் ஜனாதிபதி அங்கு சொன்னார்.

சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவின் யோசனையையும் ஜனாதிபதி எதிர்பார்த்திருக் கின்றார். இன்னும் ஒரு மாதத்திற்குள் அக்குழு வின் யோசனை ஜனாதிபதியிடம் கையளிக் கப்படும் என்று அக்குழுவின் தலைவரான அமைச்சர் திஸ்ஸ விதாரண தெரிவித்துள்ளார்.

30 வருடங்களாக இந்த நாட்டை அழித்துக் கொண்டிருந்த பயங்கரவாதத்தை மூன்றே வருடங்களில் மிகவும் வெற்றிக ரமாக ஒழித்துக் கட்டியவர் எமது ஜனாதிபதி. சரியான நேரத்தில் சரியான திட்டத்தை வகுத்து அவர் செயற்பட்டார்.

அதேபோல், இந்த நாட்டின் இரண்டாவது சவாலான அரசியல் தீர்வையும் அவர் வெற்றி கொள்வார். எமது நாட்டு மக்கள் அனைவ ரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்வொன்றை முன்வைப்பதில் ஜனாதிபதி மிகவும் அர்ப் பணிப்புடன் செயற்பட்டு வருகிறார். வேறு நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப் படும் தீர்வில் அவர் தங்கியிருக்கவில்லை - என்றார். (அ-சி)

## இடம்பெயர்ந்து.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கையில் சமீபத்தில் முடிவடைந்துள்ள உள்நாட்டு மோதல் காரணமாக 3 இலட் சம் பொதுமக்கள் இடம்பெயர்ந்துள்ளனர்.

இவர்களுக்கு எல்லாமே தேவைப்படுகின்றன. குடிதண்ணீர், உணவு, உணவு இல்லாத ஏனைய பொருள்கள் - இவற்றை விட முக்கியமாக தமது பகுதிகளுக்கு திரும்புவதும் அவர்களுக்கு முக்கிய தேவையாக உள்ளது.

டென்மார்க் அகதிகள் கவுன்ஸில் இந்த மக்களுக்கு கூடாரங்கள், உணவு, குடிதண் ணீர், உடைகள் போன்றவற்றை வழங்குகின்றது.

எனினும், இவர்களது தேவைகள் மிகப் பெரியவை. குடிதண்ணீர் என்பது தற்போது மிகப் பெரிய பிரச்சினை. மேலும் அவர்களுக்கு உணவும், உணவில்லாத ஏனைய பொருள் உகளும், சகல பொருள்களும் தேவையாகவுள்ளன.

இந்த மக்களின் முகாம்கள் வெறுமையாகக் காணப்படுகின்றன. அவர்களிடம் வேறு எதுவுமில்லை. கூடாரங்கள் மாத்திர மேயுள்ளன.

மிகக் குறைந்த எண்ணிக்கையிலானவர் களே தங்களது உடைமைகளைக் கொண்டு வந்துள்ளனர்.

மக்கள் பிளாஸ்டிக் போத்தலில் குடிதண் ணீரை சூடாக்க முயல்கின்றனர்.

அடிப்படை தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான உதவிகள் கிடைக்கின்றன.

இந்த முகாம்கள் நிரந்தரமானவையல்ல என அரசு தெரிவித்துள்ளது. டென்மார்க் அகதிகள் கவுன்ஸிலும் ஏனைய அமைப்புகளும் அரசை இந்த உறுதி மொழியை நிறை வேற்றுமாறும், மீள் குடியேற்றத்தை மிகவிரைவில்ஆரம்பிக்குமாறும்கேட்டுவருகிறோம்.

நீண்ட காலத்திற்கு இந்த மக்களை முகாம்களில் வைத்திருப்பது நல்ல தீர்வல்ல. தங்களது வீடுகளுக்கு திரும்பினால் அவர் களுக்கு தங்களைத் தாங்களே கவனிப்ப தற்கான சிறந்த வாய்ப்புகள் கிடைக்கும்.

**கலைப்பிரிவு A/L 2011**
புதிய பிரிவுகள்
ஆரம்பம்: 04.07.2009 சனி 7.30
அலகு 1 இலிருந்து கற்பிக்கப்படும்
Tam. திரு.[illegible]
Eco. திரு.B.[illegible]
Log. திரு.R.S.[illegible]
H/C. திரு.S.[illegible]
Geo. திரு.[illegible]
Hist. திரு.[illegible]
P/Sci. திரு.[illegible]
Chri. திரு.[illegible]
Hin. திரு.N.T.[illegible]
அனுமதிகள் வழங்கப்படுகின்றன.
விக்னா கல்வி நிறுவனம்
[illegible], யாழ்.

## மரண அறிவித்தல்

### தம்பிப்பிள்ளை கந்தசாமி

(சாரதி, அகதிகளுக்கான ஐ.நா. தூதரகம், யாழ்ப்பாணம்)

மட்டுவில் தெற்கு, சாவகச்சேரியைச் சேர்ந்த தம்பிப்பிள்ளை கந்தசாமி நேற்று (01.07.2009) புதன்கிழமை காலமானார்.

அன்னார் சிவசோதிமலரின் கணவரும் நிலாந்தி, துஷாந்தி (லண்டன்), ஜெயந்தி, அனோஜன் ஆகியோரின் தந்தையும் சரஸ்வதியின் சகோதரனும் இராசரத்தினத்தின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.07.2009) வியாழக்கிழமை பி.ப. 2 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சின்னத்து மயானத்தில் தகனம் செய்யப் படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.
T.P 0777756906

தகவல்:
நிலாந்தி (மகள்).

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 02.07.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org